
www.padippakam.com

# அலைகள்


a Tamilske Kunst- og Kulturforening
HAMREGT. 7, 6900 FLORØ

1992 மே




படிப்பகம்

www.padippakam.com




வெளியிடுவோர்: புளூரா தமிழ் கலை கலாச்சார சங்கம்.

படிப்பகம்

www.padippakam.com

# நல்லதோர் வீணை செய்து அதை நலன் கெட புழுதியில் எறிவதுண்டோ!!

புளூரு தமிழ் கலை கலாச்சார சங்கத்தின் ஆதரவில் வெளிவரும் 'அலைகள்' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் இது. முதலாவது இதழில் காணப்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டி சிலர் கடிதமூலமும் பலர் தொலைபேசி மூலமும் தங்களது விமர்சனங்களை தெரிவித்திருந்தனர் இவ்விமர்சனங்கள் இவ்விதழை மேலும் மெருகூட்ட உதவியது. அவர்களுக்கு எமது நன்றிகள். அதே நேரத்தில் விமர்சனங்கள் மட்டும் ஒரு சஞ்சிகையை வளர்த்துவிடாது. எனவே விமர்சனத்துடன் மட்டும் நின்றுவிடாது தரமான ஆக்கங்களையும் அனுப்ப வேண்டியது வாசகர் கடமையாகும்.

[redacted]


சிலர் எமது சஞ்சிகையின் போக்கு எத்தகையது என்று தெரியாமையால் ஆக்கங்களை அனுப்ப முடியாதுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்கள். இச்சஞ்சிகையை கலை இலக்கிய ரசனையுடன் கூடிய ஒரு செய்திப் பத்திரிகையாகவே வெளியிடுவதே எமது விருப்பம். ஆனால் எடுத்த எடுப்பிலே தரமான ஆக்கங்களை எம்மால் தரமுடியாதுள்ளது என்பது உண்மையே! ஏனெனில் அரசியல் காரணங்களுக்காக இடம் பெயர்ந்த எம்மால் நடுநிலையான ஆக்கங்களை பெறுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. எனவே இலக்கிய ஆ;வலர்கள் தங்களது உணர்வுகளை வெளிக்கொணர்வதற்கு [redacted] இது போன்ற இதழ்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

'' வெளியீட்டுக் குழு''

படிப்பகம்

www.padippakam.com

# உல்லாசம்




கடல் கடந்து வந்த பின்னே
கண்டபடி மனக்கோட்டை !
குடல் காய்ந்து உடல் மெலிய
குடித்தேனா ? இல்லை....இல்லை
குரோனர்களை கனவினிலே
கணக்கிட்டேன் ரூபாய்களாய்.



மழைக்காலம் வந்தபின்னே- உன்
மடிவிட்டு நானிறங்க
துடித்திடுமே உன்நெஞ்சம் - இங்கே
பனிநிறைந்த தனிக்காட்டில்
பலமுறை நான் தவித்திருப்பேன்
ஒடிந்திருக்கும் தடிதண்டுகளும்
ஒளிந்திருந்து அணைத்திழுக்க
ஓரவிழியும் ஈரம் கொள்ளும்
ஒருவர் கூட என் அருகில்
இல்லையம்மா!!

வேலை சென்று வந்த பின்னே
வெட்டவேணும் கோழியொன்று
வெட்டியதோ கண்டபடி - காய்ச்சியதில்
சட்டி நிறைய சொதியும் தயார்



உன்னருகில் நானிருந்தால்
உப்பைக்கூட தொடவிடாய்
தப்புக்கணக்குப்போட்டதனால்
தண்டனைதான் வெளிநாடு.

cccccccc சே.வீரசேகரன். புளுறே cccccc



படிப்பகம்

# இலக்கிய மாமா மருமகனுக்கு எழுதிய கடிதம்

அன்பின் மருமகனுக்கு!

உலகப் பொதுமறை தந்த பெருநாவலர் வள்ளுவனார் பற்றி விபரம் அனு வியிருந்தீர். அவருடைய காலம் பற்றிய கோட்பாட்டில் முரண்பாடுகளுள. இந்தியாவிலு ள்ள சாத்தூர் வழக்கறிஞர் திரு, T.S.கந்தசாமி முதலியார் அவர்கள் திருவள்ளுவர், திருக்குறள் ஆகிய இரு துறைகளிலும் தம்திறமை, புலமை ஆழ்ந்தகன்று கூர்ந்த அறிவினைச் செலுத்தி ஆராய்ந்து கண்ட முடிவின்படி எழுதிய கட்டு-ரையின் இடையில் ஓர் பந்தி ''காக்கை பாடினியார், ஆலந்தூர்கிழார் ஆகிய புலவர் களின் காலத்துக்கு மிகமுற்பட்ட காலத்தே திருக்குறள் தோன்றியிருத்தல் வேண்டும்.

கௌதமபுத்தர் கொள்கைகளைத் திருவள்ளு வர் கண்டிக்கிறாதலின், திருவள்ளுவர் புத்தர் காலத்துக்குப் பிற்பட்டுத் தோன்றிக் காக்கை பாடினியார் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்துள் ளார் என்பது பெறப்படுகின்றது. ஆகவே திருவள் ளுவர் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டைக் கொள்ளின் அது மெய்யாகும்''.

பதிப்பாசிரியர்கள் குழுவாகச் சேர்ந்து வள்ளுவரின் காலத்தை ஆராய்ந்து கண்ட கட்டுரையின் இடையில் ஒரு பந்தி ''திருவள்ளுவர் மயிலையில் பிறந்தாரென்பது கன்னபரம்பரைக்கதை. சிலர் இவர் ஊர் மதுரை என்பர். இவ்வாறாக இவரைப்பற்றி வழங்கும் வாழ்க்கைச் செய்திகள் அனைத்தும் பல்வேறு மாறுபாடுகளுடன் வழங்குதலின் எது உண்மை என்பது துணியப்படவில்லை.

இவர் வாழ்ந்த காலம் பற்றி மாறுபட்ட கருத்து களை ஆராச்சியாளர்கள் கூறிவருகின்றனர். கி.மு.6ம் நூற்றாண்டுவரையில் பல காலங்களை பலரும் கூறிவருகின்றனர்''. (சென்னைக்குழு)

எது எப்படியிருப்பினும் இலங்கைப் பத்திரிகை ஒன்றின் தலைப்பில் கிறிஸ்துவருடம் 1992 திருவள்ளுவர் வருடம் 2023 என்றும் நாளாந்தம் தேதியிடும் போது எழுதுகின்றது. இம்மூன்றில் எது சரியென துணிவீரோ அதை ஏற்கவும். ஆனால் ஒன்று தமிழ்ப் புத்தாண்டு வள்ளுவர் வருடத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. வடமொழி, தமிழ் ஆகியவற்றில் காணப்படும் கால அளவைகளின் கிரேத, திரேத, துவாபர, கலியுகங்களும் முடிந்து நான்காவதான ''கலி'' யுகத்தில் (1991 சித்திரை-1992 பங்குனி வரையுள்ள இக்காலம்) 5093 ஆகும். மிகுதி அடுத்த கடிதத்தில்,,,,,

இங்ஙனம்.

மாமா, ந. வீரசிங்கம்

(கடிதம் தொடரும்)

கையளிப்பு: குணம் FLORØ

இவ்விதழில் வெளிவரவிருந்த சிறுகதை ''நீர்க் கோலம்'' தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவரவில்லை.

# பொன்முட்டை!

Flora நகரசபையில் வசிக்கும் அகதிகளுக்கென அரசால் இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதி (Intergreing tilskod) சுமார் 3080000 குரோனர் (3,08 மில்லியன்) ஆனால் இந்நிதி நேரடியாக அகதிகளுக்கு பயன்படப்போவதில்லை. 1,5 மில்லியன் நகரசபையின் வரவு செலவு திட்டத்திற்கு நேரடியாக அனுப்பப்படவுள்ளது. மிகுதிப்பணம் அகதிகளைப்பராமரிக்கும் ஊழியர்களுக்கும் வாடகைகளுக்கும் பயன்படுத்தப்படுவதோடு சமூக சேவை அலுவலகத்திற்கு செல்லும் 0.8 மில்லியன் குரோனர்கள் கூட முழுமையாக அகதிகளுக்கு தேவைப்படுவதில்லையாதலினால் பெருமளவு பணம் மீதப்படுத்தப்படுகிறது. இவ்வுதவியானது இங்குள்ள 71 அகதிகளுக்கு மாத்திரமே அரசால் ஒதுக்கப்படுகின்றது. இவ்வருட இலையுதிர் காலத்தில் மேலும் 8 பேர் மேலதிகமாக நகரசபைக்கு வரவிருக்கின்றனர்.

ஆதாரம்: FRIDA POSTEN 26 march 92

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS





www.padippakam.com

www.padippakam.com

## பாருக்குள்ளே நல்ல நாடு!

1992 ஆண்டிற்கான ஐ.நாவின் பாரிய அபிவிருத்தி பற்றிய அறிக்கையில் உலகில் மக்கள் வாழும் நாடுகளின் 3 வது தலைசிறந்த வசிப்பிட நாடாக நோர்வே தெரிவாகியுள்ளது. கனடா, ஜப்பானும் முதலாம் இரண்டாம் இடங்களில் உள்ளன. ஜீவன வயதெல்லை, பொருளாதாரம், மூலவள உபயோகம், கல்வி என்பனவற்றைக் கொண்டு சுமார் 160 நாடுகளில் ஆய்வுசெய்தே இம்முடிவு எடுக்கப்பட்டது. சென்ற வருடம் இவ் ஆய்வில் நோர்வே 6வது இடத்தைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இம்முறை சுவீடன் 5 வது இடத்திலும் ஐஸ்லாந்து, டென்மார்க், பின்லாந்து என்பன முறையே 11,13,14 வது இடங்களிலும் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

ஆதாரம் NRK.

[redacted]

---

### பாரதியார் தாலாட்டு பாடினால் ............!!

பாரதியாரின் நெருங்கிய நண்பர் ஒரு முறை பாரதியாரிடம் ''நீங்கள் எத்தனையோ வகையான பாடல்களை எழுதுகின்றீர்கள். ஆனால் ஒரு தாலாட்டுப்பாடலையாவது எழுதவில்லையே அது ஏன்? என்று கேட்டாராம், அதற்கு பாரதியார் ''தமிழன் ஏற்கனவே தூங்கிக்கொண்டிருக்கின்றான். நான் வேறு தாலாட்டுப் பாடி மேலும் தூங்கவைக்க விரும்பவில்லை என்றாராம்.

ZZZZZ தகவல்: புஸ்பராஜா ZZZZZZZZZ

படிப்பகம்

www.padippakam.com

## தண்டனையா?

உலக குத்துச்சண்டை வீரர் மைக்ரைசன் (Mike Tysen) கற்பழிப்பு வழக்கொன்றில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார். கறுப்பு அழகிகள் போட்டியொன்றில் கலந்து கொண்ட ஒரு 18 வயது அழகியை ரைசன் கற்பழித்ததாக தொடரப்பட்ட வழகை இறுதி விசாரணை செய்த 12 நீதிபதிகள் கொண்ட குழு 9 மணி நேர விசாரணையின் பின் ரைசனை குற்றவாளியாக அறிவித்தது. இவருக்கு அதிக பட்சமான



தண்டனையாக 60 வருடம் தீரும் என எதிர்பார்க்கப்பட்ட தாயினும், பின் அது 6-8 வருடங்கள் என முடிவாகியுள்ளது.

## பழிவாங்கலா?


ஆனால் தன்னை கைவிலங்குடன் பொலிசார் அழைத்துச் செல்வதை காணஒரு கூட்டம் அலைவதாக சிலவருடங்களுக்கு முன்னரே ரைசன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஆதாரம்: NRK Text

EEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEE

ஐ.நாவின் செயலாளர் நாயகம் காலி (GHALI) ஆபிரிக்காவின் சோள உற்பத்திக்கான அவசர நிதி உதவியை கோரி விண்ணப்பித்துள்ளார். இது டிபோத்தி (DJBIOTTI),எதியோப்பியா, எரித்திரியா, சோமாலியா, சூடான் மற்றும் கெனியாவின் வட பகுதியில் பட்டினிச் சாவை எதிர் நோக்கியிருக்கும் 23 மில்லியன் மக்களிற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை.

KLASSEKAMPEN



www.padippakam.com

தென்றலும் புயலும்

| இலக்கம் | காற்று | வேகம் | |
|---|---|---|---|
| | | மீற்றர்/செக். | கி.மீ/மணி |
| 0 | அமைதி (சாந்தி) | <0.3 | <1.08 |
| 1 | இலேசான காற்று | 0.3 - 1.5 | 1,08 - 5.4 |
| 2 | இலகு தென்றல் | 1.6 - 3.3 | 5.76 - 11.88 |
| 3 | சாது தென்றல் | 3.4 - 5.4 | 12.24 - 19.44 |
| 4 | மிதமான தென்றல் | 5.5 - 7.9 | 19.8 - 28.44 |
| 5 | நீரோட்டமான தென்றல் | 8.0 - 10.7 | 28.8 - 38.52 |
| 6 | பலமான தென்றல் | 10.8 - 13.8 | 38.88 - 49.68 |
| 7 | மிதமான சண்டமாருதம் | 13.9 - 17.1 | 50.04 - 61.56 |
| 8 | சண்டமாருதம் | 17.2 - 20.7 | 61.92 - 74.52 |
| 9 | கடுமையான சண்டமாருதம் | 20.8 - 24.4 | 74.88 - 87.74 |
| 10 | திடமான சண்டமாருதம் | 24.5 - 28.4 | 88.2 - 102.2 |
| 11 | புயல் | 28.5 - 32.6 | 102.6 - 117.72 |
| 12 | சூறாவளி | > 32.7 | >117.72 |

யங்ஸே (YANGTZE) நதியிலிருந்து ஒரு பாரிய நீர்ச்சக்திச்சூளையை அமைக்க சீனா திட்டம் போட்டுள்ளது. இத்திட்டதிற்கு 40000 கோடி ரூபாவிற்கு மேல் செலவிட சீனா யோசித்து உள்ளது. இத் திட்டத்தினால் 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழக்கும் அபாயம் உள்ளதாயினும், இது சாத்தியப் படும் பட்சத்தில் உலகின் மிகப் பெரிய நீர்ச்சக்திசூளையாக திகழும். இதற்கு சீனா அரசாங்கம் செலவிட எண்ணியுள்ள மேற்குறிப்பிட்ட தொகையானது இலங்கையின் கடந்த வருட வரவு செலவு திட்டத்தை விட ஏறக்குறைய 3 மடங்கு அதிகமான தொகையாகும்.

NEWS WEEK



படிப்பகம்

www.padippakam.com

# மேகலையோ

1

மயக்கும் வண்ண விழியிடையில் – கயல்
மீனினம் நீரைக் கிழிக்க கண்டேன்
மலர்களும் சுகந்தம் சொரிந்ததடி – என்
மனமோ அலைகளாய் சுகந்தத்தை தேடுதடி
முகவட்ட நிலவை கை மறைக்க – நின்
மான் விழியை நீவிப்பார்ப்பதென்ன..? என்
மன அலையில் வீணையாய் வந்து.

மோகன ராகத்தை மீட்பதற்கா
நாணைச் சுரம்பிரித்தாய்!!

மாலைச் சூரியனும் பெருங்கடல் அலையினில்
மோகங் கொண்டு எழுந்து நிற்க
மேகவண்ணப் பஞ்சணையில் அலையலையாய்
மஞ்சப் பொதிகளங்கு கண் இமைக்க – பொன்
மனத்து வாசலிலே நீ போட்டுவைத்த
மாக்கோலம் எனைப்பலை ஜொலிக்குதடி– பொழில்
மேவும் பூவினத்து தேனலையில் வண்டினம்
கொஞ்சிட
மேகலை போல் வந்தனளே அலைகளிடை
களிகொள்ளும் – நீ
மனந் திறந்து இவன் மன அலையில்
வந்து ஒன்று தாராயோ ???

WWWWWWWW புதுவையூர் ''ஒற்றன்''ZZZZZ

# தமிழ் புத்தாண்டு எங்கிருந்துவந்தது??

ஜனவரி 1 ஐ உலகம் புத்தாண்டாக கருதுகின்றவேளை சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும் தமிழ்-சிங்களப் புத்தாண்டு என்ன அடிப்படையில்கொண்டாடப்படுகின்றது என்பதைப் பற்றி அறியவேண்டிய தேவை எமக்குண்டு. ஜனவரி 1 யேசுக்கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக்கொண்டு வரையறுக்கப்பட்டு உலகம் முழுவதும் அதைக் கொண்டாடுகின்றனர்.

அதே போல தமிழ் புத்தாண்டு எப்படித்தோன்றியது? என்று பார்க்கையில் அது ஒரு இந்துப் புத்தாண்டாகவே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் ஆகமங்கள், வேதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள சமயங்களான சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், கணபத்தியம், கபாலம் முதலானவை இந்து சமயப்/பிரிவுகள் ஆகும். அதேவேளை வேதத்தில் இரு பிரிவுகளில் ஒன்றான கன்மகாண்டத்தின் சிறப்பு நூலாக சோதிட நூல் திகழ்கின்றது. சோதிட நூல்கள்வழியாக காலங்கள், திகதிகள், மாதங்கள், வருடங்கள், இராசிகள் என்பனவற்றை விளக்கும் பஞ்சாங்கங்கள் தோன்றின. இப்பஞ்சங்கமே புத்தாண்டு தினத்தை வரையறுக்கின்றது. இதை அடிப்படையாகப்பார்த்தால் புத்தாண்டு ஒரு இந்துரீதிமுறையாகும்.

இந்து நதிக்கரையோரம் வாழ்ந்தவர்கள் இந்துக்கள் எனக் கருதப்படுகின்றார்கள். அப்படிப்பார்த்தால் இப்புத்தாண்டு வழக்கத்துக்குவந்து 5093 ஆண்டுகள் ஆகின்றது. ஆனால் இதன் பின் வந்த வள்ளுவராண்டு சற்று துல்லியமாக கணித்து 2023 ஆண்டாக தற்போதைய ஆண்டு உள்ளது.

www.padippakam.com

www.padippakam.com

இப்படி தமிழர்களுக்கு தனியொரு ஆண்டு நெறி முறை இருக்கும் போது இந்துக்களுக்கென பொதுவான ஒரு ஆண்டை தமிழ் புத்தாண்டாக கொண்டாடுவது துரதிஸ்டமாகும். தமிழ், சிங்களவர் மட்டுமன்றி மராட்டியர், தெலுங்கர் என்போரும் இதனைக் கொண்டாடுகின்றனர். இந்துப் புத்தாண்டானது மொழிரீதியாக கொண்டாடப்படுவதற்கு சிந்துவெளி நாகரீகத்தின் பின் இந்தியாவில் ஏற்பட்ட அந்நிய ஆதிக்கங்கள் பல சமயங்கள் சார்ந்த அரசர்களது ஆதிக்கமாக இருந்ததை ஒரு காரணம் எனலாம். அதனால்தான் என்னவோ நடைமுறையில் பயனற்ற ஒரு நிலையிலும் ஒரு பண்டிகையாக கருதப்பட்டு இப்புத்தாண்டு தினம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அப்படி மொழி ரீதியாக பிரிக்கப்பட்டிராவிடில் இந்த நடைமுறை அழிந்தொழிய பல சந்தர்ப்பங்கள் உண்டு.

கையளிப்பு:- கஸ்தூரி

அலைகள் பரிசுப் போட்டி இலக்கம் 1 இல் சரியான விடையெழுதி பரிசு பெறுபவர் புளுறு நகரில் வசிக்கும் செல்வன்: நிசாகரன் சரவணபவானந்தன். சரியான விடைகள் இதோ!

1. அ) இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பேர்க்,

ஆ) பிரான்ஸ்

2. அ) சோவியத் பழைய யூனியன்

ஆ) நிக்கா-லௌடிலெவ்றொக்

3. 1865     4. 1793

5. சில்வெஸ்ரர் ஸ்ராலோன் (RAMBO)

CCCCCCCCCCCCCCCCCCCCCCCCCCCC


படிப்பகம்

# புகைத்தலை நிறுத்துதல் உடலிற்கு நன்மையாகலாம்

உலகிலே நூற்றிற்கு எழுபது சதவீதமானோர், புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளர். இதில் ஆண்களும் பெண்களும் அடங்குவார்கள். கூடுதலாக கீழைத்தேச நாடுகளை விட மேலைத்தேசத்து (ஐரோப்பிய நாடுகள்) நாடுகளில்தான் புகைத்தலுக்கு இருபாலாரும் அடிமையாகியுள்ளனர். உதாரணத்துக்கு அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு நாளும் புகைத்தலினால் கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். புகைத்தலுக்கு அடிமையான ஒருவர் புகைத்தலை அடியோடு மறப்பது சுலபமான காரியம் அல்ல.

1964 இல் ஐக்கிய மாகாணங்களின் தலைமை அறுவைசிகிச்சை மருத்துவ நிபுணர் புகைபிடிப்பதினால் உண்டாகும் ஆபத்துகள் குறித்து முதன்முதல் அறிக்கையை வெளியிட்டார். 1965 ம் ஆண்டிலிருந்து ஐக்கிய மாகாணங்களிலுள்ள சிகரெட் உற்பத்தியாளர்கள்



சட்டத்திற்குக்கட்டுப்பட்டு, ஒவ்வொரு ரக சிகரெட் உற்பத்தியாளர்களும், தாம் தயாரிக்கும் சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை வாசகத்தை அச்சிடவேண்டியிருந்தது. அது என்னவென்றால் ''சிகரெட் பிடிப்பது உடல் நலத்திற்கு கேடானது''. இப்படியான அறிவுறுத்தல்கள் பெட்டிகளில் வந்தாலும் மக்கள் புகைத்தலை நிறுத்துவதாகவோ அல்லது குறைப்பதாகவோ இல்லை.

உதாரணத்திற்கு சிகரெட்டை எடுத்துக்கொண்டால், சிகரெட் புகையில் காபன் மோனோ ஒக்சைட் (காபனோரொட்சைட் - Co) அடங்கியுள்ளது. வாசனையற்ற வாயுவாகிய கார்பன்மோனோ ஒக்சைட் சிகரட் புகையில் 1-5 சதவீத அளவு உள்ளது. மேலும் இது இரத்தத்தில் உள்ள பிராணவாயுவை (ஒட்சிசன்) எடுத்துச்செல்லும் கூட்டணுவாகிய ஹீமோக்குளோபினி



www.padippakam.com
படிப்பகம்

டம் அதிக ஈடுபாடுள்ளது. இரத்தில் சுற்றிவரவே ண்டிய மிக அவசியாமன பிராண வாயுவை இது குறைக்கின்றது. ஏற்கனவே இருதய நோயால் அல திப்படும் ஒருவருக்கு இது மேலும் ஆபத்தை விளைவிக்கும்.

புகைப்பிடிப்பதால் பலவகைப்பட்ட பாதிப்புகள் மக்களுக்கு உண்டாகின்றது.

1: கர்ப்பினியாகவுள்ள ஒரு பெண் புகைப்பிடிப்ப தால் அது தாயையும், சேயையும் பாதிக்கின்றது.

புகைப்பிடிக்கும் தாய்மார்கள் உண்மையிலே தங்கள் குழந்தைகளுக்கு நஞ்சூட்டுகின்றனர் என்றே கூறலாம். நிக்கோட்டின் மற்றும் அதன் சிதைவுப் பொருளாகிய கோடினின் போன்ற நச்சு கள் இப்படிப்பட்ட பெண்நோயாளிகள் கருவைச் சுற்றியிருக்கும். திரவத்தில் இருப்பதை ஆய்வு கூட ஆராய்ச்சிகள் காண்பிக்கின்றன. மின்னணு அணுதரிசினி ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப் பட்ட மிகப் பயங்கரமான காரியம் என்னவென்று ல், கர்ப்பத்தின் சமயம் புகைபிடிக்கும் பெண்களி ன் கொப்பூழ்கொடியின் அமைப்பே மாறுகின்றது. உயிருக்கு தேவையான அனைத்தையும் கரு இந்தக்கொடி வழியாகத்தான் தீயிடம் இருந்து பெறுகின்றது.

கருத்தரித்த பிறகு முதல் இரண்டு அல்லது மூன்று வீரங்களில் தாய் புகைபிடிப்பத னால் கட்டாயமாக ஆரம்பக்கருவின் மத்திய நரம் பு மண்டலம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. கர்ப்ப த்தின் நான்கவது அல்லது ஐந்தாவது வீரத்தில் இருதய இரத்த ஓட்டநாளமண்டலம் உருவாகின் றது. அப்பொழுது அது முதலில் நச்சுப்படுத்தப்படு கிறது. புகையிலையில் இருந்து புகை தாயைவிட கருவையே மிகவும் பதிப்பதாக டாக்டர் காஸ்மின் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகிறன.

2: புகைப்பதினால் உண்டாகும் அடுத்த நோய் எம்Fபிஸ்மா. எம்Fபிஸ்மா என்பது நுரையீரல்க ளின் விரிவடையக்கூடிய தன்மையை படிப்படியா கக் குறைக்கக்கூடிய ஒரு நோயாகும். இது முடிவில் மாசுபட்ட காற்றை போதுமான அளவில் வெளியே சுவாசிக்க இயலாத வண்ணம் செய்கி ன்றது.


www.padippakam.com

www.padippakam.com

3: பர்ஜரின் நோய், இதுவும் புகைப்பிடிப்பதனால் உண்டாகும் நோய் ஆகும். அடிக்கடி புகைபிடிக்கும் ஆண்களின் எற்படுகின்றது. இரத்த குழாய்கள், நாளங்கள், நரம்புகள் புண்ணாகும் பிரதிபலிப்பின் போது வெள்ளை இரத்த அணுக்கள் உள்ளே பிரவேசிப்பதால் ஏற்படும் இரத்த குழாய்களின் சூழ்புறப்பகுதியின் வீக்கம் இந்நோயின் தன்மையாகும். பாதிக்கப்பட்ட கையோ, காலோ உணர்வற்றுப்போவதும், ஒரு கைவிரலோ அல்லது கால் விரலோ நீலம் பூத்துப்போவதோ வழக்கமான முதல் அறிகுறியாகும். நரம்புகளும் புண்ணாகியிருப்பதால் கடுமையான வலியும் ஏற்படலாம். அவை கட்டுப்படுத்தும் சிறிய இரத்தக்குழாய்கள் மிகவும் கடுமையாக சுருங்கவும் செய்யலாம். அவர்கள் குளிராக உணர்ந்த போதிலும், மட்டுமீறிய கூருணர்வுடைய பரிவு நரம்புகள் பாதத்தை மிக அதிகமக வியர்வை சிந்தவைக்கலாம். முற்றிவரும் பர்ஜர் நோயின் சாதாரணமான சிக்கல்களாக இரத்தம் தடைசெய்யப்பட்ட சீழ் புண்களும் தசையழுகலுடன் கூடிய உடலின் உட்கூற்றழிவும் உள்ளன.






பர்ஜர் நோயை கட்டுப்படுத்துவதனில் புகைப்பிடித்தலை நிறுத்துவதுதான் நல்லது. இது கொலம்பியா பல்கலைக்கழக கல்லூரியின் மருத்துவர்கள் மற்றும் அறுவைசிகிச்சை நிபுணர்களின் ஆய்விலிருந்து கூறப்பட்டவை. சிகரெட் புகைப்பதற்கும் நுரையீரல் புற்று நோய்க்கும் மற்றும் இதர நுரையீரல் சம்பந்தமான நோய்களுக்குமிடையே உள்ள தொடர்பை பெரும்பாலான மக்கள் நன்கு அறிந்திருந்த போதிலும் மாரடைப்புகளில் ஒரு முக்கிய ஆபத்தான காரணக்கூறு என்பதைப் பலர் இன்னும் அறியாமல் இருக்கின்றார்கள்.

புகைப்பிடித்தலை நிறுத்த சிலவழிமுறைகள்:

1: நிறுத்த ஒரு தேதியை குறித்து அதைப் பின்பற்றுங்கள், உடனடியாக அல்லது படிப்படியாக பழக்கத்தை விட்டுவிடுங்கள்.

2: இந்தப் பழக்கத்தை முறிப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுங்கள். வீட்டில் புகைப்பதற்கு என்ன இருந்தாலும் அவற்றை

படிப்பகம்

www.padippakam.com

வீசிவிடுங்கள். புகையிலை நாற்றம் வரும் உங்கள் துணிகள் அனைத்தையும் சுத்தம் செய்யுங்கள். புது வாழ்க்கையை தொடருங்கள்

3: புகைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து முழுமையாக விலகும் போது, புகைபிடிக்கும் நண்பர்களையும், சூழ்நிலைகளையும் தவிருங்கள். நூல்நிலையம், பொருட்காட்சிசாலைகள் போன்ற புகைபிடிப்பதை தடைசெய்யும் இடங்களுக்கு செல்லுங்கள்.

4: புகைபிடிக்கும் ஆசை உங்களை தூண்டும் போது'' கலிங்கம்'' போன்றவற்றை வாயிலிட்டு சுவையுங்கள் பின்பு பற்களை நன்றாக துலக்கி பழச்சாறு அருந்துங்கள்

- வதியூர் ஜனகன்-

நாட்டுப்புற மக்களிடையே புகைத்தலை நிறுத்துவதற்கு சீனா அறிமுகப்படுத்திய திட்டமொன்று சிறு வெற்றியை அளித்திருக்கிறது. கடந்த 3 வருடங்களில் 5 % மானோர் புகைத்தலை நிறுத்தியுள்ளனர். நாட்டில் மொத்தம் 30 கோடி புகைபிடிப்போர் உள்ளதாக அரசு அறிக்கை கூறுகிறது.

TOBACCO ALERT

6 – 10 % மான வாயு மாசடைதலுக்கும் 10 – 30 % மான மற்றைய சூழல் மாசடைவுகளிற்கும் இரசாயன நடவடிக்கைகளே காரணமாகும்.

THE ECOLOGIST



படிப்பகம்

www.padippakam.com

# 5வது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

கருப்பொருள்: தேமதுரத் தமிழும் தென் துருவத் தமிழரும்

அகில உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 5 வது மகா நாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3/5 திகதிகளின் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறவுள்ளது. அதனைப் பார்வையிட விரும்புவோருக்கான விண்ணப்பத் திகதி கடந்த மார்ச் 31 உடன் முடிவடைந்து விட்டது ஆனால் அதற்கான ஆய்வுக்கட்டுரைகளை எதிர்வரும் யூலைவரை அனுப்பலாம். இம் மகா நாடு முதலாவதாக சென்னையிலும்(1977), இரண்டாவது, மூன்றாவது நான்காவது மாநாடுகள் முறையே மொறிசியஸ், சேலம், கோலாலம்பூர் (1987) நகர்களிலும் நடைபெற்றது. 5 வது மாநாடு சம்பந்தமான விபரங்களுக்கு:-

CONFERENCE SECRETARY.
ICTC 92,
P.O.BOX : S 60
HOMEBUSH SOUTH.
NSW - 2140
AUSTRALIA.
Phone 02-6496379
Fax 02-7492390

இடம்: நியூ சவுத் வெல்ஸ் பல்கலைக்கழகம், சிட்னி.



படிப்பகம்


www.padippakam.com

# தமிழ்மொழியில் எழுத்துச் சீர்திருத்தம்! கலைச்சொல்லாக்கம்.

பொதுவாக மொழி என்பது ஒரு ஊடகம். ஒரு மனிதன் தன் எண்ணக்கருவை, சிந்தனையை செயற்பாட்டை இன்னொருமனிதனுக்கோ அல்லது சமுகத்திற்கோ வெளிப்படுத்தும் ஆற்றலிக்கவொரு கருவியாக மொழிவிளங்குகின்றது. இதுவே விலங்குகளைப் போல இயற்கைக்கு அஞ்சியதோடு, அதன் போக்கில் இயைந்து வாழாமல் இயற்கையை அடக்கி அதன் மீது தனது ஆளுமையை செலுத்தும் ஆற்றலை மனிதனுக்கு கொடுத்தது. அதிலும் பல இலட்சம் ஆண்டுகள் தொன்மையான மானுடவியல் வரலாற்றிலே மொழியின் தொன்மையென்பது சில ஆயிரம் ஆண்டுகளே. இந்த சில ஆயிரமாண்டுகால கட்டமே மனிதகுலத்தின் நாகரீக கட்டமும், உயர்ந்த வளர்ச்சிக் கட்டமுமாகும். இது முடிந்த முடிவல்ல இன்னமும் தொடரும்.

நமது தமிழ் மொழியைப் பொறுத்தவரை அது சில ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானது. நீண்ட செழுமையான இலக்கிய வரலாறும், இலக்கண சிறப்புமுடையது, மறுப்பதிற்கில்லை. ஆயினும் நம்மவர்கள் சிலர் மொழிமீது கொண்ட பற்றுதல் காரணமாக "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றிய மூத்த தமிழ்'' என்றும், முழுநிறைவான தன்மையோடு இறைவனால் படைக்கப்பட்டதால் அது ஏனைய மொழிகளை விட சிறப்புவாய்ந்தது என்றும் சொல்வது வழக்கம். இது ஒரு நம்பிக்கை. இதற்கு ஆதாரமும் அறிவும் தேவையில்லை.

நமது மொழி திராவிட இனக் குழுக்களுக்கிடையே முதலில் தோற்றம் பெற்ற ஒரு மொழி. அதாவது திராவிட இனக் குடும்பத்தின் சிந்தனையில் இருந்து உதித்த முதன் மொழி தமிழ். ஆனால் அது தோற்றம் பெற்ற காலத்திலேயே இன்றிருந்த நிலையில் தான் இருந்தது என்பது ஒரு அறிவுபூர்வமான கருத்தல்ல. ஒரு சமுகத்தின் இனத்தின் வரலாற்று தேவையை ஒட்டியே அந்த சமுகத்திற்கும், இனத்திற்குமுரிய மொழியின் செழுமையும் விரிவும் ஆழமும் தங்கியுள்ளது. சங்க காலத்தில் ஏற்பட்ட செழுமையும் இலக்கண வளர்ச்சியும் திடீரென ஏற்பட்டதொன்றல்ல. அன்றைய தமிழ் சமுகஅமைப்பின்வரலாற்றுத் தேவையொட்டி எழுந்த நீண்ட கால சிந்தனையின் விரிவாக்கமே. பக்தி இலக்கிய காலகட்டமும் அப்படியே.



அதன் அடிப்படையில் இன்றும் இன்றைய சூழ்நிலைக்கேற்ப நமது மொழி விரிவுபடுத்தவேண்டிய, செழுமைப்படுத்தவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வரலாற்றுத் தேவையை நாம் புறக்கணிக்கமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com

## எழுத்து வரிவடிவ சீர்திருத்தம்

தமிழ் மொழியின் வரிவடிவ சீர்திருத்தம் வரலாற்று தொடக்கத்தில் இருந்தே வந்திருக்கின்றது. இன்று நாம் கையாளும் வட்டெழுத்து வரிவடிவமென்பது தமிழ் மொழி தொடங்கிய காலத்தில் இருந்ததுபோல் இல்லை. முதலில் குறியீட்டு அடிப்படையிலான சித்திர எழுத்து, பின்பு பிராமி வரிவடிவம் இதன் வளர்ச்சியில் இன்றைய வட்டெழுத்து வரிவடிவம் என்ற அடிப்படையில் தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றது.

இன்றைய வரிவடிவம்

வட்டெழுத்து சீர்திருத்தம் 18 நூற்றாண்டில் வீரமாமுனிவரால் செய்யப்பட்டது. மெய்யெழுத்துக்கு புள்ளி இடும் முறை, கால் புள்ளி, அரைப்புள்ளி, மற்றும் எ, ஏ வேறுபாடுகளை அவரே அறிமுகமாக்கினார். நமது காலத்து பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வே. இராமசாமி நாயக்கர் உயிர்மெய் எழுத்துக்களின் முரண்பாடான வரிவடிவத்தில் இருந்து லை, ளை, னை, ணா, றா, னா, ணை முதலான வற்றை ணா, றா, னா, ணை, லை, ளை, னை என மாற்றி புதிய சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார், தனது திராவிட கழக ஏடான 'விடுதலை'யில் இதை நடைமுறைப்படுத்தினார், பின்பு எம்.ஜி.ஆர் அரசு இதனை தமிழகத்தில் சட்டபூர்வமாக்கி நடைமுறைப்படுத்தினார். இலங்கையிலும் இது நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது. இதைவிட தமிழறிஞர் சாலை இளந்திரையன் தலைமையிலான அறிவியக்க பேரவையினர் இந்த சீர்திருத்தத்தையும் மேலும் ஓர் சீர்திருத்தத்தை முன் வைத்துள்ளனர். அதாவது ஐ என்ற எழுத்தை அய் என்றும், அதன் கலப்பால் வரும் உயிர்மெய் எழுத்துக்களை கய்(கை) நய் சய் அதாவது பய்யன் (பையன்) மடய்யன் (மடையன்) குடய் (குடை) என்று எழுதும் முறையே அது இதை அவர்கள் வெளியிடும் அறிவியக்கம் என்ற சஞ்சிகையிலும் கையாண்டுவருகின்றார்கள் ஆனாலும் பெரியாரின் சீர்திருத்தம் போல இது பரந்த அளவில் செயல்படவில்லை. அச்சி இயந்திரம் பாவனைக்கு வரு முன்பே ஏடுகளில் எழுத வசதியாக கையாண்ட வரிவடிவத்தையே இன்றும் நாம் கையாண்டுவருகின்றோம்..

ஐ = அய்

பை = பய்

தை = தய்

ஆனால் இப்போது நாம் கணனி யுகத்திற்கே வந்துவிட்டோம் எனவே காலத்தின் தேவைகருதி அடிப்படை இலக்கண விதிகளுக்கு முரண்படாதவகையில் எழுத்துகளை மாற்றவேண்டியது அவசியம். நம் நெடுங்கணக்கு அரிச்சுவட்டை எடுத்து நோக்கினால் பெரியாரின் சீர்திருத்தத்திற்குப் பின்பும் ஒரே நிரையில் உள்ள சில எழுத்துக்கள் பொதுக் குறியீடு ஒன்றைக் கொண்டிராத முரண்பட்ட


படிப்பகம்

www.padippakam.com

தன்மையினை காணமுடியும். உதாரணம்: க்+அ=க என்கிறோம். க்+ஆ=கா எனவும் க்+இ= கி என்கின்றோம். இங்கே க வில் இருந்து கா வை வேறுபடுத்த 'ா'வும், கி யை வேறுபடுத்த 'ி'ம் இடுகின்றோம். இது உயிர் மெய் எழுத்தின் முதல் எழுத்தான க் வில் இருந்து ன வரை பொதுக் குறியீடாக பாவிக்கப்படுகிறது. க்+உ, க்+ஊ நிரை தவிர ஏனைய நிரைகளின் இது பாவிக்கப்படுகிறது. பொதுவாக ? என்ற குறியீடு வட்டெழுத்து வரிவடிவத்துக்குரிய ஒரு குறியீடு இது சிங்களம், மலையாளத்தில் க்+அ நிரையிலிருந்து க்+ ஆ நிரையை வேறுபடுத்த பயன்படுத்தப்படுகின்றது. இதை நாம் க்+உ-க நிரைக்குரிய பொதுக் குறியீடாகவும் இதன் கீழ் பகுதியில் சுழி ஒன்றையிட்டு (ஃ) க்+ஊ-கூ நிரைப்படுத்தலாம். இதன் மூலம் குரங்கு என்பதை க ரங்க என்றும் குத்து விளக்கு என்பதை கத்த விளக்க என்றும் கூச்சல் என்பதை கூச்சல் என்றும் எழுதலாம்

*. இந்த மாற்றம் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள உயிர் மெய் எழுத்து நிரைகள் அனைத்தையும் தனித்தனியான பொதுக்குறியீட்டு முறையாக கொண்டுவருவதோடு கணனி, தட்டச்சுகளிலும் 22 எழுத்துக்களை குறைக்கலாம். பெரியவர்களும் குழந்தைகளும் தமிழ் நெடுங் கணக்கை இலகுவாக கிரகிக்க முடியும். இந்த வரலாற்றுத் தேவை கருதி உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும் பல்கலைக்கழகங்களும் ஒரு பொது முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

## கலைச் சொல்லாக்கம்.

இன்றைய உலகத்தில் எல்லாத் துறைகளும் துரிதமாக முன்னேறிவருகின்றது. இந்த முன்னேற்றத்துக்கு ஏற்ப புதிய கலைச் சொற்களை நாம் உருவாக்காது பழமையை பேசிக்கொண்டிருந்தால் தமிழ் மொழியின் வளர்ச்சி நிச்சயமாக பின் தள்ளப்படும். இப்போது பின்தள்ளப்பட்டிருக்கின்றது. மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பத்துறைகளின் கலைச்சொல்லாக்கப் பற்றாக்குறை மிக அதிகம் உண்டு.

தமிழில் கலைச்சொல்லாக்கம் என்கின்றபோது அது தூயதமிழில் செய்யப்பட வேண்டும் எனச் சிலரும், இல்லை அது முடியாது குறிப்பிட்ட கலைச் சொல்லின் மூலவடிவத்தை சிறிய ஒலிமாற்றத்துடன் இறக்குமதி செய்தால் போதும் என இன்னொரு சாராரும் கச்சை கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். இந்த இரு சாராரும் அறியாத ஒரு பொருளை, அறியாத ஒரு பாமரனுக்கு அறியவைக்கும் விதத்தில் ஒரு கலைச் சொல்லாக்கம் ஆக்கப்படுவதில் தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது என்பதை மறந்துவிடுகிறார்கள். தமிழ் நாட்டில் பஸ்சை பேருந்து என்றும், காரை மகிழுந்து என்றும், புகைவண்டியை தொடருந்து எனவும் கலைச் சொல்லாக்கம் செய்திருக்கின்றனர். இவைகள் எல்லாம் நகரப்பகுதியுடன் சரி கிராமப் புறத்தில் ''ஐயா பேருந்து எப்போது வரும் என்று கேட்பதில்லை. வண்டி எப்பங்க வரும்? என்றுதான் கேட்பார்கள். தஞ்சாவூர் திருச்சி மாவட்டங்களின் பஸ்சை இன்னும் கார் என



படிப்பகம்

www.padippakam.com

அழைக்கும் வழக்கம் உள்ளது. ஒரு சமயம் நாம் தமிழகத்தில் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்களை அணுகி அராஜக வாதம் என்பதற்கு தமிழ் கலைச்சொல்லாக்கம் எப்படி அமையும் என நாம் கேட்டதற்கு வல்லடி வல்லாண்மை வழக்கு என்றார்கள். நாமோ அதைக் கேட்டு காத தூரம் ஓடிவிட்டோம்.

1985 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் பல்கலைக்கழகம் புதிய தமிழ் கலைச்சொல் அகராதியொன்றை தொகுக்கும் பணியை மேற்கொண்டார்கள் ஆயினும் உலகளாவிய நிலையில் அது இன்னமும் வரவில்லை. பல தமிழ் அறிஞர்கள் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டாலும் அவர்கள் கலைச் சொல்லாக்கத்திற்கு செலவழிக்கும் நேரத்தைவிட வித்துவத்தனத்துக்கும் பிற்போக்குத்தனத்துக்கு எதிராகவும் போராடலே அதிக நேரம் செலவழிக்கவேண்டியுள்ளது. இன்று சகல துறைகளிலும் வளர்ச்சிகண்ட ஆங்கிலமொழியை எடுத்துக்கொண்டால் ஏராளமான கலைச்சொற்கள் கிரேக்கம், இலத்தின் மொழிகளின் இருந்துபெறப்பட்டது குறிப்பிடத்தக்கது. நன்றி: வீரகேசரி

ஆபிரிக்க நாடுகளின் சாரசரி வருமானம் 0.5% இலும் குறைவான விகிதத்திலேயே கடந்த 10 வருடங்களில் அதிகரித்து வந்திருக்கிறது. அதே நேரத்தில் 2 - 2.9 % வரை முதலாம் உலக நாடுகளின் சாரசரி வருமானம் அதிகரிக்கின்றது என்று உலகவங்கி அறிக்கை தெரிவிக்கிறது.

AFRICA RECOVERI

இந்தியாவில் வாழும் 850 மில்லியன் மக்கள் ஆக 5 மில்லியன் (170 பேர் - 1 தொலைபேசி) தொலைபேசிகளையே உபயோகிக்கின்றனர். அதே நேரத்தில் இத் தொலைபேசிகளை பராமரிப்பதில் 0.5 மில்லியன் வேலையாட்கள் ( 1 தொழிலாளி - 10 தொலைபேசிகள்) அமர்த்தப்பட்டுள்ளனர்.

INDIA PERSPECTIVES

Flora Tamilske Kunst- og Kulturforening
HAMREGT.7, 6900 FLORØ



படிப்பகம்

www.padippakam.com

சராசரியாக ஒவ்வொரு ஜெர்மனியரும் 3600 கலோரி உணவினை தினந்தோறும் பெறுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் புர்கினோ பாசோ (BURKINO FASO) நாட்டு வாசி ஒருவர் 1700 கலோரி உணவையே நாளொன்றிற்கு பெறுகிறார். உலக சனத்தொகையில் 1/5 பங்கினர் அதாவது 100 கோடி மக்கள் போதுமான உணவின்றி வாழ்கின்றனர்.

STERN

உலகின் இருபெரும் செப்பு உற்பத்தி நாடுகளான ஸம்பியா(Zambia) ஸையர் (zaire) ஆகியவற்றில் செப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு எய்ட்ஸ் (AIDS)நோய் அபாயம் உள்ளது. செப்பு உற்பத்தி மிகவும் சிறப்பாக இருப்பினும் அங்கு வேலை செய்யும் தொழிலாளர் சொற்ப வயதில் இறந்துவிடும் அபாயம் உள்ளது.

FINANCIAL TIMES

இதுவரை நடந்த யுத்தங்களினால் இறந்தவர்களில் அரைவாசியினர் ஐரோப்பியர்கள். இந்த நூற்றாண்டில் நடந்த போர்களில் இறந்தவர்களில் 73% மானோர் ஐரோப்பியர். 1500 – 1900 இறந்த ஆண்களில் 23 % மானோரே ஐரோப்பியராவர். கணிப்பீடு ஒன்றின்படி இதுவரையில் 100 – 200 கோடிப்பேர்வரை போர்களில் இறந்துள்ளனர்.

BULLTIN OF PEACE PROPOSALS


படிப்பகம்

www.padippakam.com

# சொந்தங்கள் சொல்லத்தானே



சந்திரனைக் காட்டி, அங்க பாரடா தம்பி ஒளவைப்பாட்டி என்ன மாதிரி பாக்கிடிக்கிறாவென்று, என்று எனது பாட்டி பல மூடக்கதைகள் சொன்னாலும், இடைக்கிடை அப்போதிருந்த வாழ்க்கை முறை, உணவுமுறை பற்றிச் சொல்லும்போது, ஏதோ ஒரு ஆர்வத்துடன் கேட்டுவந்தேன். என்னதான் இருந்தாலும், 58 கலவரம் பற்றியும் அங்கு எனது பாட்டனார் புகையிலைப் பாடத்துடன் எரிக்கப் பட்டதையும் நினைவு கூரும் போது, பாட்டி தன்னையறியாமலே அழுதுவிடுவா. பாட்டி பலமுறை சும்மா சும்மா அழுது புலம்பினாலும், அவ தனது கணவனை நினைத்து அழும்போது, அதில் ஏதோ ஒரு வகை அனுதாபம் எனக்கு அந்த 10 வயதிலும் ஏற்படும்.


படிப்பகம்

www.padippakam.com

பாட்டனார் இறந்தகையோடு பாட்டியின் மூத்த மகன், அதாவது எனது அப்பாவின், படிப்பிற்கு முழுக்கு கொடுத்துவிட்டு பாட்டி முத்தையன்கட்டில் குடியேறி விட்டா. ஆனையிறவுதாண்டி அங்கால் போனால் கொழும்பு வரையும் ஆனைக்காடு என்று தங்களுக்குள்ளேயே ஒரு சிறுவட்டம் போட்டு வாழ்ந்திருந்த அந்த யாழ்ப்பாணச் சமூகத்தை விட்டு பாட்டி 58 இலேயே புறப்பட்டது ஒரு அதிசயம்தான். இருந்தாலும் பாட்டனாரின் உழைப்பில் கௌரவமாக வாழ்ந்த அவளால் வறுமையில் வாழ துளிகூட இஷ்டம் இல்லையாம். இது பாட்டி அடிக்கடி சொல்லிக் கொள்ளும் வசனம். என்னதான் கஷ்டம் வந்தாலும்கூட, ''தம்பி மண்ணை நம்பித்தான் வாழவேண்டும். நான் ஒன்றும் பிறந்த நாட்டைவிட்டு

ஓடிப்போகேல்லை.... ஓ சொல்லிப்போட்டன்''. பாட்டி அப்போ அடிக்கடி புலம்பும்போது, ''அந்த மனுசிக்கு விசர்'' என்று அம்மா சொல்லுவா. அம்மாவிற்கும் பாட்டிக்கும் பனிப்போர் வந்தால் ரஷ்யா, அமெரிக்கா தோற்றுவிடும். ஆனால் அவர்களுக் கிடையில் அப்படி சண்டை வரும்போது இருவரிடமும் நான் இனிப்புக்கு பணம் வாங்கிவிடுவேன்.

எனக்கு 13 வயது ஆகும்போது அப்பா ஆனைமிதித்து இறந்து போனார். அந்த நேரத்தில் பாட்டி வைத்த ஒப்பாரி தாங்கிமாளாது. மிளகாய் கண்டுக்கு தண்ணிகட்ட ஆற்றைக் கடந்து போற வழியில்தான் அப்பாவை ஆனை மிதிச்ச தென்று சொல்லினம். என்னைப் பார்த்து அந்த நேரத்தில் ஆறுதல் சொல்லாத ஆட்களே கிடையாது. அவர்கள் அனுதாபப் படும் அளவிற்கு நான் பெரிதாக ஒன்றும் கவலைப்படவில்லை. காரணம் அந்த நேரத்தில் நான் அவரிடம் அடிவாங்காத நாளே கிடையாது. பிற்காலத்தில் நான் அவரின் பிரிவையெண்ணி வருந்தியதுண்டு.


படிப்பகம்

www.padippakam.com

அப்பாசாகேக்க நான் 8ஆம் வகுப்பு படிச்சனான். அம்மா பாட்டியின் பாணியில் எனது படிப்புக்கு முழுக்குப்போட திட்டம் போட்டா. அதையறிஞ்ச எங்கட விவசாயம் படிப்பிக்கிற மாஸ்ரர் வீட்டை வந்து,''அவன் விவசாயத்திலே நல்ல கெட்டிக்காறன். அவனை ஏன் படிப்பால நிப்பாட்டிறியள்?'' என்று அம்மாவைக் கேட்க,''விவசாயத்திலே கெட்டிக்காரன் என்றால் நல்லா விவசாயம் செய்வான் தானே மாஸ்ரர். அதுதான் படிப்பால நிப்பாட்டி அந்த ரெண்டாயிரம் கண்டு தறையையும் பார்க்க விடப்போறன்''. அம்மாவின் மேதாவித்தனமான பேச்சு. ஆனால் மாஸ்ரர் விடுவதாக இல்லை. ''அப்படியில்லைப் பாருங்கோ, அவன் மற்றப் பாடங்களிலும் நல்ல கெட்டிக்காரனாம், மற்ற மாஸ்ரர்மார் சொன்னவை''.

வருடம் தோறும் புதிதாக 11 கோடி மக்கள் மலேரியாவல் பாதிப்புறுகின்றனர். இதில் 9 கோடிப்பேர் ஆபிரிக்கர். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி 10 – 20 இலட்சம் மக்கள் வருடந்தோறும் மலேரியாவால் இறக்கின்றனர் இதில் பெரும்பான்மையானோர் குழந்தைகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

WORLD HEALTH

அப்பாவின் மறைவிற்குப் பின் பாட்டியும் அம்மாவும் நல்ல ஒற்றுமை. ஏனென்டால் பாட்டி அம்மாவில் நல்ல அனுதாபம் காட்டத் தொடங்கி விட்டா. அது மாஸ்ரரோடை அம்மா கதைக்கும் போது பிரதிபலித்தது. ''ஏன் மாஸ்ரர் மாமிக்கும் வயது போட்டுது. இவ்வளவு காலம் எங்களோட இருந்தவாவை, மற்றவேன்ரை வீட்டை அனுப்பேலாது. அப்படி அவாவிற்கு மற்ற பிள்ளையள் இருக்கிறதென்றாலும் அங்கை யார் பார்க்கிறது மாஸ்ரர்''.


படிப்பகம்

www.padippakam.com

''மனிசிதான் தான் அப்பிடி மற்றப்பிள்ளையளிட்ட போனாலும், நான் உந்தக் காணியளை குத்தகைக்கு விட்டு, கஞ்சி குடிச் சென்டாலும் ஒரு மூலையில் கிடந்திடுவிடுவன். ஆனால் உந்தப் பிள்ளையின்ரை வாழ்க்கை மாஸ்ரர்''. அம்மா தன்ரை அறியாமையில் எனக்கு நன்மையெனக் கருதி எனது எதிர்காலத்தை பாழாக்கப்போறா என்றுணர்ந்த மாஸ்ரர், ''அப்படியென்டா அவனை படிப்பிக்கின்ற செலவெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுறன். அவனை எனோட விடுவியளா?''.

மாஸ்ரருக்கும் பிள்ளையில்லை, அதால அவரும் மனிசியும் என்னை நல்லா வளப்பினம் என்று நினைத்தோ என்னவோ அம்மா கலங்கிய கண்களுடன் தலையாட்டினா. இருந்தாலும் என்னை அம்மாவிட மிருந்தும் பாட்டியிட மிருந்தும் பிரித்துச் செல்லும்போது மாஸ்ரருக்கும் கண்கள் கலங்கிவிட்டது.

அதன் பின் நான் தொடர்ந்து முல்லைதீவிலேயே O.L. வரை படித்தேன். அதன்பின் மாஸ்ரர் கண்டிக்கு மாற்றலாகிக் கொண்டு எனக்கும் அங்கு A.L. படிக்க ''அட்மிசன்'' எடுத்துத் தந்தார். அங்கு அப்படியே பேராதனை என்று பொறியியல் பட்டம் வரைக்கும் மாஸ்ரரும் மனிசியும் என்னை தங்கள் பிள்ளை போல் நடத்தினர்.

ஆனால் என்னை யாழ்ப்பாணமோ, முல்லைத்தீவோ போகக் கூடாது என்று மாஸ்ரரின் கண்டிப்பான உத்தரவு. அம்மா இடைக்கிடை வந்து என்னைப் பார்த்துப்போவா. மாஸ்ரருக்கு என்னதான் முற்போக்குச் சிந்தனைகள் இருந்தாலும், என்னை வடக்கு செல்ல அனுமதிக்காதது, நான் ஏதாவது இயக்கத்தில் சேர்ந்து விடுவேன் என்ற பயம்தான். மாஸ்ரரின் அந்த பாச

தொடர்ச்சி 36 பக்கம் பார்க்க




படிப்பகம்

# தொலைந்து போன தொண்ணூற்றொன்று!

# 1991

எம்மைக்கடந்து சென்ற தொண்ணூற்றொன்றை தொலைந்துபோன தொண்ணூற்றொன்று அழைப்பதே பொருத்தமானது. ஏனெனில் அது விட்டுச் சென்ற வடுக்கள் ஏராளம். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் அதிக சீரழிவைக் கொண்ட ஆண்டாக 1991 கருதலாம். விஞ்ஞான வளர்ச்சிகளின் இறுதி உச்சகட்டவிளைவுகளை கொடுக்கும் என்று கருதப்படும் இந்நூற்றாண்டின் இறுதிக்கட்டமான தொண்ணூறுகளின் இரண்டாம் ஆண்டே எம்மை இப்பாடு படுத்திவிட்டது. வளைகுடா யுத்தம் முதல் கிழக்கைரோப்பிய அரசியல் மாற்றம் வரை நடந்த நிகழ்ச்சிகளுக்கு விஞ்ஞானவளர்ச்சி எவ்வழியில் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் நேரடியாகவே பார்த்துவிட்டோம்



ஆயுதங்களின் கொடுமைதான் 91ஐ ஆட்டிப்படைத்தது என்று பார்த்தால் இயற்கையின் சீற்றமும் அதற்கு போட்டியாகவுள்ளது. மூன்றாம் மண்டல நாடுகளிலேயே மிகவும் கீழ்நிலைக்கு சென்று கொண்டிருந்த பங்களாதேஷில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அந்நாட்டை உலகின் வறிய நாடு என்ற நிலைக்கு தள்ளிவிட்டது. 91இல் நடந்த நிகழ்வுகளில் உலகமக்களை மிகவும் கலக்கிய சம்பவம் எதுவென்று எம்மைக் கேட்டால் ராஜீவ் கொலையை குறிப்பிடுவோம். ஆனால் உலக மக்கள் மிகவும் உன்னிப்பாக கவனித்த விடயங்கள் வளைகுடா யுத்தம், சோவியத் ஆட்சிமாற்றம், கிழக்கைரோப்பிய ஆட்சி மாற்றம் என வரிசைப்பட்டு ராஜீவ் காந்தியின் கொலை ஏழாவது இடத்தில் நிற்கின்றது.



www.padippakam.com
படிப்பகம்

# தொலைந்து போன தொண்ணூற்றொன்று! 91

1 தை 14: பதினைந்து லித்துவேனியர் கொல்லப்பட்டனர், 120 பேர் காயமடைந்தனர். சோவியத் துருப்புக்கள் ''வில்னியுஸ்'' உள்ள ஒலிபரப்புக் கட்டடத்திற்குள் நுழைந்தனர்.

தை 15: குவைத்திலிருந்து ஈராக் படைகள் விலகுவதற்கான ஐ.நா.வின் காலக்கெடு முடிவடைந்தது.

தை 17: 2500 பன்னாட்டுப் போர்விமானங்கள் ஈராக் மீது குண்டு மாரி பொழிந்தன.

தை 30: வில்னியுஸிலிருந்து சோவியத் துருப்புகள் வெளியேறியது.

2 மாசி * குவைத்தை விட்டு வெளியேறமாட்டேன் என சதாம் வானொலி மூலம் அறிவித்தார்.

* ஜோர்ஜ் புஷ் சண்டை நிறுத்தத்தை உதாசீனம் செய்தார்.

மாசி 26: சதாம் குவைத்தை விட்டு வெளியேறுவதாக அறிவித்தார்.

மாசி 27: குவைத்தியப் படைகள் பன்னாட்டுப்படைகளுடன் சேர்ந்து குவைத்தைக் கைப்பற்றியது

Flora Tamilske Kunst- og Kulturforening
HAMREGT. 7, 6900 FLORØ

மாசி 28: ஜோர்ஜ் புஷ் போர் நிறுத்தத்தை அறிவித்தார். அல்பானிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைவர் ''அன்வர் ஹொக்ஷா''வின் சிலையை 'திரானா' நரில் நிறுவினர்.



3 பங்குனி * ஐ.நா தனது ஈராக்கிற்கு எதிரான தடைகளை தொடரப்போவதாக அறிவித்தது.

* ஷியா முஸ்லிம்கள் பஸ்ரா நகரத்தில் சதாமிற்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.

*மாத இறுதியில் குர்திஷ்களுக்கு எதிராக சதாம் துருப்புகள் எடுத்த பழிவாங்கள் முயற்சியில் அமிலம், நேபாம் குண்டு மற்றும் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன. அதில் 15,000 பேர்வரையில் ஈராக் பகுதியில் உயிரிழந்தனர்.

பங்குனி 31: அல்பானியாவில் முதலாவதாக நடந்த சுதந்திர தேர்தலில் தூதுவராலயம் ஒன்றிற்குள் பிரவேசிக்க முயன்ற மக்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.



www.padippakam.com

4

சித்திரை * சதாம் படைகள் குர்திஷ் படைகளை தாக்கியழித்ததில் ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் பனிமலைகள் ஊடாக துருக்கிக்கும் ஈரானுக்கும் இடம்பெயர்ந்தனர்.

* பங்களாதேஷில் ஏற்பட்ட இயற்கையழிவிற்கு 140,000 பேர் பலியாகினர்.

* சுரங்கத் தொழிலாளிகளின் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பொரிஸ் ஜெல்ஸ்ரின் கொர்பர்சோவிற்கு தனது ஆதரவை வழங்கினார்

* இத்தாலிய பயணிகள் கப்பல் மோபி பிரின்ஸ் மோதுண்டதில் 143 பேர் காயமுற்றனர்.

வைகாசி * முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது வெடி குண்டு தாக்குதலில் பலியானர்.

வைகாசி 30: குரோஷிய தனிரச்சியத்தை விரும்பியது. இது பெயரளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

* எதியோப்பியா சர்வாதிகாரி 'மெங்கிஸ்து' தப்பியோடினார். மூன்று புரட்சிகர சக்திகள் நாட்டை தம்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

* ஆர்மேனியருக்கும், ஆசாபாசாவினருக்கும் இடையே நடந்த கலகத்தை அடக்க பலநூறு சோவியத்துருப்புகள் உள்நுழைந்ததில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.




6

ஆனி * ருஸ்ஸாந்தில் நடந்த முதலாவது நேரடி தேர்தலில் பொரிஸ் ஜெல்ஸ்ரின் தலைவரானார்

* லெனின் கிராட் நகரின் பெயரை சென் பீற்றர்ஸ்பேர்க் என மீண்டும் மாற்றவேண்டுமென அங்குள்ள மக்கள் தீர்மானித்தனர்.



* இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் கொம்யூனிஸ் கட்சி பெரும்பான்மையல்லாத முதலாவது அரசாங்கம் ஒன்றை அல்பானியா பெற்றது

* ஐரோப்பியச் சந்தையில் இணைவதற்கு சுவீடன் தனது விண்ணப்பத்தையனுப்பியது.

யூகோ மாநிலங்களான சிலோவானியாவும், குரோஸியவும் தனித்தியங்கின. யூகோ துருப்புகள் சிலோவோனியாவில் தாக்குதல் மேற்கொண்டது.

7

ஆடி * வார்சோ ஒப்பந்தத்தில் முறிவு ஏற்பட்டது

* யூகோவில் சண்டையை நிறுத்த ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் தொடர்ந்து முயற்சித்தன



www.padippakam.com


படிப்பகம்

சிலோவேனியவில் இருந்து யூகோ படைகள் வி லகின. ஆனால் குரோசியாவில் நிலமை உக்கிர மடைந்தது.

* சீனாவில் இயற்கை சீரழிவில் (புயல்) 10 கோடிமக்கள் பாதிப்புற்றனர்.

* சர்வதேச ஒலிம்பிக் சங்கம் தென்னாபிரிக்கா வுக்கான தடைஉத்தரவை ரத்துச்செய்தது. அமெரி க்கா பின்பு ஏற்றுக்கொண்டது.

* நெடுந்தூர ஏவுகணைகள் குறைப்பு சம்பந்தமா க ஏற்பட்ட உடன்பாட்டில் புகூஷ், கோர்பியும் கைச்சாத்திட்டனர்.

8

ஆவணி * குரோசியாவில் நடந்த சண்டைகள் உக்கிரமடைந்தன. பின்பு எல்லாப் பகுதிகளுக்கு ம் அது பரவியது. அப்பகுதிகளின் பல செர்பேரர் கள் வசித்துவந்தனர்.

ஆவணி * இத்தாலி சென்ற 12000 அல்பான் அகதிகள் பொலிசாரின் கெடுபிடிகளினால் அல் பானியாவிற்கு திருப்பியனுப்பப்பட்டனர்.

* 8 பேர்கொண்ட குழுவொன்று சோவியத்தில் ஆட்சிக்கவிழ்ப்பொன்றை நிகழ்த்தியது. கிறிம் என்ற இடத்தில் கோர்பி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். ஆனால் அச்சதி மூன்று நாட் களின் முறியடிக்கப்பட்டது.

* சதி முறியடிக்கப்பட்டதுடன் ஜெல்ஸ்ரின் கொம்யூனிஸ் கட்சியை தடைசெய்தார். கோர்பி KGB இன் தலைமை விலத்தியதுடன் அதன் மத் திய குழுவையும் கலைத்தார்.



9

புரட்டாசி: * அமெரிக்கா தனது அணுக்குண்டு களையும் துருப்புகளையும் குறைப்பது சம்பந்த மான ஒரு தலைப்பட்சமான ஆயுதக் குறைப்பை ஜனாதிபதி புகூஷ் அறிவித்தார்.




* சோவியத் மக்கள் கொங்கிரசினர் கோர்பி யின் திறந்த மனக்கொள்கையை ஏற்றுக்கொண்டனர்.

* மசிடோனியா யூகோசிலாவியாவில் இருந்து விலகுவதாக அறிவித்தது. ஆனால் குரோசியா வில் தொடர்ந்து சண்டை நடந்தது. ஐரோப்பி ய நாடுகளின் சமாதான மகாநாடு ஆரம்பமாகிய அதே நேரத்தில் குரோசியாவிற்குள் படைகள் புகுந்தன.

* அர்ன திரோ கொல்ரின் முன்னாள் அதிகா ரியான ஜெமாடிச்சிநோவிற்கு KGB இல் தன் டனை கிடைத்தது.



www.padippakam.com


10 ஐப்பசி

* நாடினா கோர்டிமர் இலக்கியத்திற்கான நோபல் பரிசையும், பர்மிய பெண்மணியான ஆங் சூகி சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றனர்.
* 19 நாடுகளின் பிரதிநிதிகள் கம்பூச்சியாவிற்கான சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. ஐ.நா. படைகள் கம்பூச்சியாவிற்குள் புகுவதையும் அனுமதித்தது.
* மத்திய கிழக்கிற்கான சமாதான மாநாடு MADRID இல் ஆரம்பமானது.




11 கார்த்திகை:

* சேர்பியாவும், குரோசியாவும் ஐ.நா படைகள் உள்வருவதை விரும்பின.
* ஐ.நாவின் புதிய செயலாளராக எகிப்தின் உதவி வெளிவிவகார அமைச்சர் "பொத்ரோஸ் காலி தெரிவானார். இவர் ஐ.நாவின் செயலாளராக தெரிவாகிய முதலாவது ஆபிரிக்காரவர்.




12 மார்கழி:

* ருஸ்லாந்து சோவியத்தில் இருந்து பிரிவதுடன் சோவியத் யூனியனாக இராது என அமெரிக்கா அறிவித்தது.
* லெபனானில் இருந்து கடைசி நாலு பிரிட்டிஸ் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர். ஆனால் இரு ஜேர்மனியர்கள் தொடர்ந்தும் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர்.

தொகுப்பு: மில்ரன்

ஆதாரம்: NRK Text

0000000000000000000000000000000


படிப்பகம்
www.padippakam.com

www.padippakam.com

# பூமியின் கூரையில் பல ஓட்டைகள்.

தொகுப்பு : தயா STRYN.

பூமியைச்சுற்றி ஓசோன் படை உண்டு என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதன் எடை ஏறக்குறைய 3,2,10 மெற்றிக்தொன் (பூமிக்கு மேல் 15 – 40 km) வரையுள்ள பகுதியில் இவ்வாயுப்படை (STRATOSPHERE) காணப்படுகிறது.

இவ் வாயுப்படையானது சூரிய ஒளியிலிருந்து பெறப் படும் புற ஊதாக் கதிர்களின் (ULTRAVIOLET RAYS) ஒரு பகுதியை உறிஞ்சிக்கொள்வதுடன் தெறிப்படையவும் செய்கின்றது.

இக் கதிர்வீச்சு தோல் புற்று நோயை (SKIN CANCER) உருவாக்குவதுடன் கண் நோய் (CATARACT) போன்றவற்றை தோற்றுவிக்கும். அத்துடன் தாவரங்களில் நிகழும் ஒளித்தொகுப் பையும் தடுக்கின்றது. இவற்றிலிருந்து நாம் அறிவது ஓசோன் படை உயிரினங்களை பாதுகாக்கும் ஒரு இயற்கை ஒழுங்கமைப்பாகும்.

இவ் வோசோன் படையானது செயற்கை வாயுவான குளோரோ புளோரோ காபன் (CFC) இனால் அழிக்கப் படுகின்றது. இது சுற்றாடலில் பயன் படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் சில.


(அ) வாசனைத்திரவியங்கள் அடைக்கப்படும் புட்டிகள்.
(ஆ) குளிர்சாதனப் பெட்டிகள்.
(இ) றெஜிபோம் பயன்பாடு.




படிப்பகம்

ஒரு குளோரோ புளோரோ காபன் மூலக்கூறு ஒரு லட்சம் ஓசோன் மூலக்கூறுகளை பிரித்து அழிக்கக் கூடியது. ஓசோன் CFC ஆல் அழிக்கப்படும் பொறிமுறை கீழ் காட்டப் பட்டுள்ளது.


1. ஒரு ஒட்சிசன் அணு ஒரு ஒட்சிசன் மூலக்கூறுடன் இணையும்போது ஓசோன் உருவாகிறது.




2. புற ஊதா கதிர் வீச்சினால் CFC ஆனது ஒரு அணுவை இழக்கிறது.





3. தனியாக்கப்பட்ட குளோரின் அணு ஓசோனை தாக்கும் போது விளைவாக $O_2$ உம் குளோரோ மொனொக்சைட்டும் (ClO) உருவாகிறது.






www.padippakam.com
படிப்பகம்

4. ClO ஆனது தனியான ஒட்சிசன் அணுவுடன் இணைந்து O உம் Cl அணுவும் உருவாகிறது.




இப்பொறி முறை தொடரும் போது $O_3$ அழிக்கப்பட்டு விளைவாக $O_2$ உரு வாக்கப்படுகிறது.



இயற்கையானது ஓசோன்களை உருவாக்குவது போல் அழிக்கவும் செய்கிறது. உதாரணமாக, எரிமலை போன்ற தாக்கங்களின் விளைவால் உருவாகும் குளோரின், ஓசோன் படையினுள் புகுவதால் ஓசோன் அழிக்கப்படுகிறது. (ஓசோன் அழிவிற்கு அடிப்படை குளோரின் என்பதை பொறிமுறையில் அவதானிக்க.)

வளிமண்டலத்தில் $N_2O$ (நைதாசவொட்சைட்டு) கூடுதலாகவுள்ள பகுதியில் ஓசோனின் அழிவு குறை வாயுள்ளது. என்பதை ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக் கின்றன. ஓசோன் படையின் அழிவை தடுக்க விஞ்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ஞானிகள் முன்வைக்கும் ஆலோசனைகள் சில வருமாறு.

1. ஓசோன் கோளப் பகுதியில் புறொப்பேன் ($C_3H_8$) எதேன் ($C_2H_6$) என்பவற்றை உட்செலுத்தி சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத விளைவுகளை இவை CFC உடன் சேரும்போது கொடுக்கக் கூடியதாக மாற்றுதல்.

2. CFC ஆனது ஓசோன் பகுதியை சென்றடைவதற்கு முன் லேசர் கதிர்வீச்சைக் கொண்டு (lazer - rays) அதனை வளியிலிருந்து நீக்குதல்.

நாசா (NASA) ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் முடிவுகளின்படி வட துருவத்தில் ClO அதிகமாக இருப்பதாகவும், அன்ராரிக்கா (ANTARTICA) விற்கு மேலுள்ள பகுதியில் O படை கூடுதலாக அழிக்கப் பட்டுள்ளதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அண்டைக்கால ஆராய்ச்சிகளின்படி கனடா, அமெரிக்கா, ஐரோப்பா பகுதிகளில் 30 –40 % வரை அழிவு அதிகரித்திருப்பதாக முடிவுகள் கூறுகின்றன.

1600 ஆம் ஆண்டுகளிலும் ஓசோன் படையில் அழிவு ஏற்பட்டதும் அது இயற்கையாகவே நீங்கியதும் தெரியவருகிற போதிலும், இன்றைய நிலையில் இது இயற்கையாக நீங்குமா? ஆராய்ச்சிகள் நல்ல முடிவைக்கொடுக்கும் என எதிர்பார்ப்போம்.

நன்றி: TIME;READERS DIGEST;BERGEN TIDS.




படிப்பகம்

# புறூறா நகரில் ஓர் தமிழ் புத்தாண்டு விழா!

சென்ற மாதம் 18 திகதி மாலை 16.00 மணிக்கு என்று அறிவிக்கப்பட்ட தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சி பிறல் தமிழர்களின் பண்பு சற்றும் மாறுகல் சுமார் 15 நிமிடம் தாமதத்தின் பின்பே ஆரம்பமாகியது. புறூறு, சிலெல்கன், ஹீபன், லொலோப், டென்மார்க் என்று பல இடங்களில் இருந்து வந்த தமிழ் சிறார்கள் வண்ண வண்ண உடைகளில் வந்து வழங்கிய நிகழ்ச்சிகள் பார்க்க பரவசமாக இருந்தது. அறிவிப்பாளர் நிகழ்ச்சிகளைச் சரியாக விளம்பரப்படுத்தாமை ஒரு பெருங் குறைபாடாக இருந்தது.

லொலோப் தமிழ் கலைகளைச்சார சங்க சிறார்கள் வழங்கிய நாட்டிய நாடகமும், செல்வி கோபிகா சந்திரகுமார் வழங்கிய பாம்பு நடனமும் சபையோரின் ஏகோபித்த பாராட்டைப்பெற்றது. அந்த சங்கத்தினர் வழங்கிய 'வெளிநாடு வந்த அகதி' என்ற வில்லுப்பாட்டு வயிறு குலுங்க சிரிக்கவைத்தது. அதன் பின்



ஐரோப்பாவில் நன்கு பிரபல்யமான "The Roots" இன் இன்னிசை நிகழ்ச்சி இடம் பெற்றது. அதில் உள்ளூர் பாடகர்கள் அறிமுக வரிசையில் திரு. முகுந்தன், செல்வன். கிருஷ்ணதாசன் மற்றும் திருமதி அமுதா சிதம்பரநாதன் ஆகியோர் வழங்கிய பாடல்கள் இசைக்குழுவின் பாடல்களுக்கு


படிப்பகம்
www.padippakam.com

www.padippakam.com

இசையாக இருந்தது என பலரும் சிலாகித்தன
ர். The Rose இசைக்குழுவினர், இசையின்
ஆதிக்கத்தில் பாடல் வரிகளை மழுங்கடித்துவிடு
வதாக 'கலைஞர்கள்' உட்பட பலரது குறைபாடுகளிற்கு
பின்னாளில் முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது. அதற்கு
காரணம் சிறப்பான ஒலியமைப்பே! இசைக்குழு
வுக்கு தலைமை தாங்கிய திரு. சுந்தர் சங்க ரிற்
னைத்தை மனதார பாராட்டினோர்.

நிகழ்ச்சியின் இறுதியில் 'சிங்காரவேலன்'
காண்பிக்கப்பட இருந்தது. உரிய நேரத்தில்
அது நடைபெறாமல் போனது ரசிகர்களுக்கு பலத்த
ஏமாற்றம் அளித்தாலும் 'கற்பூர முல்லை'
மாற்றாக திரையிட்டு ஓரளவு திருப்திப் படுத்தி
னர் விழாக்குழுவினர். திட்டமிட்ட 22.00 மணிக்
கு ஆரம்பமாகவேண்டிய நிகழ்ச்சி நடுநிசி 01.15
மணிக்கு முடிவடைந்தது. புறூ நகரில் வசிக்
கும் தமிழர்களைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்
கு பார்வையாளர்க்கு செய்யப்பட்டிருந்த உணவு,
தங்குமிட வசதிகள் பலராலும் பாராட்டப்பட்டது

'கலைப்பிரியன்'.



அலைகள் இதழின் முதலாவது பிரதியை 2500 குரோனர்களுக்கு திரு. க. சதானந்தன் (இடது) ஏலத்தில் பெற்றுக் கொள்ளும் காட்சி.



படிப்பகம்

www.padippakam.com

முன்னர் கிழக்கு ஜெர்மனியின் ஸ்ராசி(STASI) உளவு ஸ்தாபனத்தை சார்ந்த 10 பேர் நோர்வேயில் தற்போது இருப்பதாக அந்த நிறுவனத்தின் முன்னாள் அதிகாரியான குன்தார் பொன்சாக் (GUNTHER BOHNSACK) தெரிவிக்கின்றார்.

NRK

சுவிற்சர்லாந்தின் பாரிய உணவு உற்பத்தி நிறுவனமான நெஸ்ஸில் (NESTLE)தென்கிழக்கு ஆசிய நாடுகளான மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, புரூனே (BRUNEI)ஆகிய நாடுகளில் 100 மிலியன் டொலர் செலவில் தொழிற்சாலைகளை நிறுவ இருக்கின்றது.

SOUTH

முஸ்லிம்களின் புனிதஸ்தலமான மெக்காவிற்கு ஒவ்வொரு வருடமும் சுமார் 2 மில்லியன் மக்கள் வருகின்றனர். சுறுசுறுப்பாக அங்கு நடக்கும் வியாபாரங்களில் இசைக்கருவி, கருத்தடை சாதனங்கள், மற்றும் உயிர் வாழ்ந்து வரும் வி.ஐ.பிகளின் புகைப் படங்கள் மட்டும் விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

WORLD MAGAZINE



படிப்பகம்

1991 இல் புதிதாக சுமார் 5000 வெளிநாட்டவர்களுக்கு நோர்வே நாட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது.1990 விட 300 பேரை அதிகமாகவும் 1987 விட இரட்டிப்பு அதிகமானதாகவும் கொண்ட தொகையாகும்.




அவ்வாறு பிரஜாவுரிமைபெற்றவரில் 20%(1000பேர்) வியட்நாமியர் 15%(750பேர்) பாகிஸ்தானியர். மேலும் சென்ற வருடம் இவ்வுரிமை பெற்றோரில் அரைவாசிக்கு மேலானோர் ஆசிய நாட்டவர் என நோர்வே நாட்டின் குடிசன,புள்ளிவிபரதிணைக்களத்தின் மத்திய இலாக தெரிவிக்கின்றது.

ஆதாரம்:- NRK.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

22 ஆம் பக்க தொடர்ச்சி

உணர்வுதான் என்னை பாட்டியின் செத்த வீட்டிற்கு கூட செல்லவிடாமல் கட்டுப்படுத்திவிட்டது.

83 கலவரத்துடன் நிலைமை மேலும் மோசமடைய மாஸ்ரர் என்னை நோர்வே அனுப்பிவிட்டார். இங்கு வந்து தற்போது நோர்வே பிரஜாவுரிமை கிடைத்தவுடன், எனது

அம்மாவை இங்கு அழைப்பதற்கு விண்ணப்பித்து விசாவை எதிர்பார்த்திருக்கும் வேளையில், மாஸ்ரரின் மனைவியிடமிருந்து கடிதம், அதாவது எனது ரீச்சரம்மாவின் கோரிக்கை..... உனது அம்மா பெயரில் இங்கு எனக்கு பாஸ்போட் செய்ய முடியும். அவரும் போய்விட்டார் எனக்கு சொந்தம் எண்டு என் பிள்ளை நீதான் இருக்கிறாய். என்னை எப்படியாவது உங்கு கூப்பிடு.....''என் பிள்ளை'', இந்த வரிகள் என்னை ஏதோ செய்துவிட்டது. இரவு முழுக்க தூங்கவில்லை. மாஸ்ரரின் மனைவி, ரீச்சரம்மா, அம்மா என்று உறவு வளர்ந்து விட்டது. காலையில் வேலைக்கு லீவு போட்டுவிட்டு முல்லைத் தீவிலுள்ள அம்மாவிற்கு கடிதம் எழுதினேன்.

அன்புள்ள அம்மாவிற்கு,
மாஸ்ரர் இறந்துவிட்டார், நீங்கள் அறிந்திருப்பீர்களோ என்னவோ. மற்றும் நான் உங்களுக்கு விண்ணப்பித்தபடி விசா கிடைக்க வில்லை. ஆனால் ரீச்சரம்மா யாரோ தெரிந்தவர்களைப் பிடித்து விசா எடுத்து இங்கு வரவிருக்கிறா......

---

என் மன நிலையும், நான் எழுதிய பொய்யும் அந்த பாசமிக்க ஏழைத்தாய்க்கு என்றும் தெரியப்போவதில்லை.

முற்றும்.

(யாவும் கற்பனையே) ''கௌதம்''



படிப்பகம்

www.padippakam.com

# யூகோவைப் பற்றி சிறுகுறிப்பு!



ஐரோப்பா கண்டத்தின் மத்தியில் 256,000 ச கி.மீ.விஸ்தீரணத்தைக் கொண்ட யூகோசிலாவியா ஒரு ஜனநாயக குடியரசாகும். இங்கு சேர்பு (SERBO) குரோசியன் (CROTIAN) ஸ்லோவியன் (SLOVENE) மசிடோனியா (MACEDONIAN) மொழிகளைப் பேசும் பல இன மக்கள் 23,753,000 வரை வாழ்கின்றார்கள். இந்நாட்டு நாணயம் டினார் (DINAR) ஒரு டொலருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அது 542,60 டினாருக்கு சமன்.(BELGREAD) பெல்கிரேட் இதன் தலைநகர் ஆகும்.

சேர்பியன் மக்கள் 400 வருடகாலமாக துருக்கியரினால் ஆளப்பட்டு வந்த காலத்தில் கடைசி நூறு வருட காலம் விட்டு விட்டு நடைபெற்ற யுத்தங்களினால் 1804 ம் ஆண்டு குரேசியா நாட்டு மக்களையும் சேர்த்து ஒரு சுதந்திர அரசை அமைத்துக்கொண்டார்கள். இதற்கு முன்பு குரேசியா ஆஸ்த்திரியா நாட்டு அ.மைப்பின் கீழ் இருந்தது. குரேசிய மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டதாக சரித்திரமுமில்லை, அதற்காக அவர்கள் போரிட்டதுமில்லை. ஆனால் குரேசியா மக்கள் ஆஸ்திரியா,சேர்பிய ஆட்சிகளின் கீழ் மிகவும் கொடுமைகளை அனுபவித்தனர்.

சேர்பியன் மக்கள் 400 வருடம் துருக்கியரினால் ஆளப்பட்டுவந்த காலத்தில் கடைசி நூறு வருட காலம் விட்டு விட்டு நடைபெற்று போர்களின் மூலம் 1804 இல் குரேசிய நாட்டு மக்களையும் சேர்த்து ஒரு சுதந்திர அரசை நிறுவினார்கள். இதற்கு முன்பு குரேசியா ஆஸ்திரிய நாட்டு அரமைப்பின் கீழ் இருந்துவந்தது குரேசிய மக்கள் தங்களை தாங்கள் ஆண்டு வந்ததாக சரித்திரமும் இல்லை அதற்காக அவர்கள் போரிட்டதுமில்லை. ஆனால் குரேசிய மக்கள் ஆஸ்திரிய,சேர்பிய ஆட்சிகளின் கீழ் மிகவும் கொடுமைகளை அனுபவித்தவர்கள். 1929 இல் சர்வாதிகாரி அலெக்சாண்டர் அரசியல் சட்டத்தைக் கலைத்துவிட்டு ஏகாதிபத்திய ஆட்சி நடாத்தி வந்தார். இவருடைய ஏகாதிபத்தியமும் 1931 இல் அவர் குரேசியன்-மசிடோனியன் பயங்கரவாதிகளினால் கொலை செய்யப்பட்டதுடன் முடிவு பெற்றது.

1941 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6 ம் திகதி ஜேர்மன் நாசிகள் யூகோஸ்லாவியா மீது படை எடுத்தபோது குரேசிய மக்கள் நாசிச சக்தியின் உத்தரவாதத்துடன் ஒரு தனியாட்சியை அமைத்



படிப்பகம்

துக்கொண்டனர். ஆனால் நாசிச சக்தியின் குரூரமான செயல்கள் ஒரு உள்நாட்டுப்போரை உருவாக்கியது.

இந்த யுத்தம் யூதரை மட்டுமன்றி குரேசியாவி வாழ்ந்த 20 இலட்சம் மக்களையும் வெளியே ற்றும் நோக்கமாக இருந்தது. இப்போரில் 17 இலட்சம் மக்கள் உயிர் நீத்தார்கள். பிரிட்டன், பிரான்ஸ் ( நேச நாடுகள்) ஐக்கிய யூகோஸிலாவியாவுக்கு உதவிசெய்ய, குரேசிய மக்கள் இத்தாலி, ஜேர்மனி (அச்சு நாடுகள்) உதவியை நாடினார்கள். ஆனால் சேர்பியாவின் கொடூரமான கெரில்லாguarilla போர் முறையினால் குரேசியா மிகவும் தாக்கப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்பு குரேசியன் இனத்தைச் சார்ந்த டிட்டோ Tito 35 வருடகாலம் ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சிக்காலம் சேர்பியன் மக்களுக்கு கசப்பான யுகமாக இருந்தது. இவருடைய பொருளாதாரக் கொள்ளைகள் குரேசிய மக்களுக்கு கூடுதல் நன்மைகளை அளித்தது. முற்போக்கு



திட்டங்கள் மசிடோனிய மக்களுக்கு நன்மையாக இருந்தது. இவர் உருவாக்கிய இரு புதிய மாகாணங்கள், அவற்றிற்கு ஜனாதிபதியின் அமைப்பில் இடம் ஒதுக்கிக் கொடுத்தது என்பன சேர்பியன் இனத்தவரின் அபிலாசைகளுக்கு எதிராக இருந்தது.


1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ம் திகதி குரேசியா சுதந்திர பிரகடனம் செய்து கொண்டதுடன் இன்றைய உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானது. பல யுத்த நிறுத்தங்கள் போரை முடிவுக்கு கொண்டுசெல்லாவிட்டாலும், சேர்பியன் மக்கள் கூடுதலாக வாழும்பகுதிகளுக்கு ஐ.நா ப் படைகளை வரவழைப்பதற்கும், குரேசியாவில் உள்ள சேர்பியன் மக்களின் பாதுகாபிற்கு குரேசியா உத்தரவாதமளிக்குமேயானால் சேர்பியா தனது படைகளை குரேசியா எல்லையில் இருந்து வாபஸ்வாங்குவதற்கும் இணங்கியுள்ளது

MMMMMMM தொகுப்பு: விநோஜ் புஞ்ஞ MMMMMM


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் கரப்பந்தாட்டம்




வலையின் உயரம் :

ஆண் – 245 சென்ரிமீட்டர்.
பெண் – 224 சென்ரிமீட்டர்.

நடைமுறைக்கு ஒத்து வராத விடயங்களை பேணிப்பாதுகாப்பதில் நாம் கில்லாடிகள். புதிதாக ஒன்றை கற்க முடியாமல் எமக்குத் தெரிந்தவற்றை வைத்துக்கொண்டு மாரடிப்பதில் எம்மிடையே மிகவும் பிரபல்யமான ''overgame'' என அழைக்கப்படும், கரப்பந்தாட்டமும் ஒன்றாகும். சுமார் 180 நாடுகளிலிருந்து 15 கோடிக்கும் மேலானோர் பதிவு செய்யப்பட்டு–சட்ட ஒழுங்கு விதிகள் அமைக் கப்பட்டு சர்வதேச அரங்கில் ஆடப்படும் கரப் பந்தாட்டத்திற்கும், ஆளுக்கு ஆள் சட்ட விதிகளை மாற்றி அமைத்து விளையாடும் எமது உள்ளூர் ''overgame''இற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.

International Federation of Volleyball என அழைக்கப்படும் சர்வதேச கரப்பந்தாட்டச் சங்கத்தில் Norway நாட்டிலிருந்தும் 500 சங்கங்கள் மூலம் 30000 வீரர்கள் தம்மை பதிவு செய்துள்ளனர். உலகளாவிய


படிப்பகம்

www.padippakam.com

ரீதியில் பாரிய விளையாட்டாக இது நிகழ்வதாலும் நோர்வே சமூகத்தினரால் பெரிதும் விரும்பப் படுவதாலும் Set up என அழைக்கப்படும் இவ் இலகு முறை விளையாட்டினை நாமும் கற்றுக் கொள்ளுதல் எம்மை மற்றைய சமூகத்தினருடன் இணைப்பதற்கு ஓர் பாலமாக அமையும்.

1. பணித்தல்.

மைதானத்தின் கோட்டிற்கு வெளியே இருந்து குறுக்கே கட்டப்பட்டிருக்கும் வலையில் முட்டாத வாறு மேலாக பந்தை மறுபக்கத்திற்கு அடிக்கப்படுகின்றது.

2. பணித்தலை பெற்றுக்கொள்ளல்.

எதிரணியின் பணித்தலை பெற்றுக்கொள்ளுதல் விளையாட்டின் முக்கிய செயற்பாடாகும். பந்தை பெற்றுக்கொள்பவரைப் பொறுத்து, மற்றும் இரு வீரர்களின் ஊடாக பந்து எதிரணியின் மீது தாக்கப்படுகின்றது.

3. பந்தை தயார் பண்ணுபவர்.

பணித்தலை பெற்றுக்கொள்பவருக்கும், மறு பக்கத்திற்கு பந்தை ''நொருக்கி'' அடிப்பவருக்கும் இடைப்பட்ட நிலையில் இவர் செயற்படுவார். இவர் தனது விரல்களின் உட்பக்கத்தைக் கொண்டு, எதிரணியைத் தாக்க இருப்பவருக்கு வசதியாக பந்தை, ஒழுங்கு படுத்திக் கொடுப்பார்.


படிப்பகம்

www.padippakam.com

4. நொருக்கி அடிப்பவர்.

பந்தை வலைக்கு மேலாக அனுப்பும் செயற்பாட்டில் கடைசி சந்தர்ப்பத்தைப் பெறுபவர். வலைக்கு அருகே விளையாடும் மூன்று வீரர்களுக்கு மட்டும் நொருக்கி அடிக்க அனுமதியுண்டு. பின்னிற்கும் விளையாடும் வீரர்கள் நொருக்கி அடிப்பதானால் வலையிலிருந்து 3 மீற்றர் தூரத்தில் உள்ள கோட்டிற்கு பின்பு தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

5. தடுப்பவர்.

எதிரணியின் தாக்குதலை முறியடிக்க எடுக்கப் படும் முதலாவது முயற்சி இந்த நிலையில் ஆரம்பமாகிறது. இருவர் கூட்டாக இதில் செயற் படுவார்கள். இந்த முயற்சி தாக்குதலை முறி யடிப்பது அல்லது அதன் வேகத்தை நிறுத்துவதாகும்.

6. தற்காப்பு.

தடுப்பவர்களினை மீறி வரும் பந்தை அது நிலத்தை அடைவதற்கு முன்பு பெற முயற்சி செய்வது. வீரர்களின் சரியான நிலைப்பாடும், மின்னல் வேகத்தில் இயங்குதலும் இந்த நிலைக்கு முக்கியமானதாகும். ஆண்களுக்கான விளையாட்டில் அடிக்கப்படும் பந்தின் வேகத்தை மணித்தியாலத் திற்கு 180 கி.மீ என்று கணக்கிடப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

7. புள்ளிகள்.

பந்தை பணிக்கும் அணி வென்றால் ஒரு புள்ளியைப் பெறுகின்றது. பணிக்கும் அணிக்கு எதிரணி வென்றால் அவர்களுக்கு புள்ளி கிடைப்பதில்லை. பதிலாக சேர்விஸ் பண்ணும் சந்தர்ப்பத்தைப் பெறுகின்றார்கள். முதல் 15 புள்ளிகளைப் பெறும் அணி அந்த ஆட்டத்தில் வெற்றியைப் பெறுகின்றது. சில சந்தர்ப் பங்களில் 17 புள்ளிகளைப் பெறும்வரை விளையாட்டு நீடிக்கப்பெறுகின்றது. மூன்று ஆட்டங்களின் மூலமும், 5 ஆட்டங்களின் மூலமும் வெற்றி தோல்வி நிச்சயிக்கப்படுகின்றது.

மூல ஆக்கம்: நோர்வே கரப்பந்தாட்டச் சங்கம்.
Norges Volleyball forbund.

1984 – 85 காலப்பகுதியில் 62 % என்ற உயர் நிலையிலிருந்த இந்தியாவின் கார் விற்பனை கடந்த வருடம் 2 % ஆல் குறைந்துள்ளது. கடந்த வருடம் அங்கு விற்பனையான கார்களின் எண்ணிக்கை 213,000. INDIA TODAY

தென்கிழக்காசியாவில் எயிட்ஸ் நோயினை கட்டுப் பாட்டிற்கு கொண்டு வராவிடின், அங்கு உல்லாச பயணத்துறை மிகவும் பாதிக்கப் படுமென மணிலாவின் IPS செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் முடிவா? (சிறுகதை)



இலங்கையிலிருக்கும் தன் தாய்க்கு செல்வரதி கடிதம் எழுதிக்கொண்டிருந் தாள். அருகில் ராஜசேகர் படுத்திருந் தான். அவனது நெஞ்சின் மேல் விளையாடிக்கொண்டிருந்தாள் நிலோக்ஷா.

''என்னங்க! வீட்டுக்கு என்ன எழுதுவது?'' ''நான் சொல்ல என்ன இருக்கு,,,வருகிற கிழமை நிலோக்ஷாவுக்கு 5 வது பிறந்தநாளென்று எழுது.வேறை ஒண்ணுமில்லை.'' என்றுவிட்டு நிலோ க்ஷாவை தூக்கி மீண்டும் நெஞ்சின் மேல் போட்டுக்கொள்கின்றான். அவனது நாடியை சுரண்டி ''அப்பா,,அப்பா,, கதைசொல்லுங்கப்பா,,,!''என்ன,,குட்டி?'' என விளங்காமல் அவன் ''கதை,,,'' என சிணுங்குறாள். ''பிள்ளை.. இண்டைக்கு Bபார்னஹாகனுக்கு (குழந்தை பராம ரிப்பு நிலையம்) போனனீங்கள்.அங்கை என்ன செய்தீங்களென்று சொல்லவேணும்.அதுக்குப் பிறகு அப்பா கதை சொல்லுவன்''.என அவன் அவளது தலையை கோதியபடி கேட்க,''நான் எதுவுமே செய்யலை,,' என அனுக்கதுடன்.''ஏன் ஏன் செய்யலை?'' என அதட்டுகின்றான்.

''இண்டைக்கு வெளியிலே ட்ருர் போகும் போது என் கூட யாருமே வரலை.'' ''ஏன்..?'' புரியாமல், ''நான் கறுப்பாம் அதனாலே யாருமே என்னை சேர்க்கமாட்டாங்களாம்'' அவளது அனு ங்கல்,அழுகையாக மாறுகிறது.சிறிய அதிர்ச்சியோடு அவளை பார்க்க ''என்னை எல்லோரும் கறுப் பென்கிறுங்கப்பா,,!'' குரல் விக்கி அழுகை இரைச்சரலோடு '' எ,,ஏ,,என்ன குட்டியிது,,, இதுக்கு போய் அழுகிறதா? இதிலையென்ன இருக்கு,,அப்பா கறுப்பு,,பிள்ளையும் கறுப்பு,,அந்தா அம்மாவுக்கு லெட்டர் எழுதீட்டுயிருக்கிறளே,, உன் அம்மா,, அவள் கூட கறுப்புத்தானே'



படிப்பகம்

www.padippakam.com

என பிள்ளையின் சோகம் புரிந்தும்,பூசிமுழுகி.. சிரிக்கின்றான்,ஆனால் நிலோகஷாவின் கூச்சல் நிற்கவில்லை '' அப்படியென்று,, ஏன் மற்ற பிள்ளைகள் வெள்ளையாக இருக்கின்றாங்கள்,நான் மட்டும் கறுப்பாக இருக்கின்றேன்?''.''அது,,அது அவர்கள் இங்க குளிர் நாட்டிலை பிறந்தவை, அவன் வசனத்தை முடிக்குமுன் நிலோகஷா குறுக்கிடுகின்றாள்.''நான் கூட இங்கதானப்பா பிறந்த னான்.ஏன் வெள்ளையாக இருக்கக்கூடாது?'' குழந்தையின் கேள்விக்கு அவன் பதில் கூறிக்கொ ண்டே இருந்தான்.ஆனால் அவளோ கேள்விகளை கிளப்பிக்கொண்டிருந்தாள்.இடையிடையே அழு கையால் வந்த விக்கல் முற்றுப்புள்ளி போட்டுக்கொண்டிருந்தது.

அவளை எப்படியாவது தூங்கவைக்க வேணுமென்ற முடிவோடு தன் மனைவியிடம் படுக்கும்படி உத்தரவிட மின் குமிழ் அணைகிறது. ஆனால் குழந்தையின் விக்கல் ஓயாமல் கதை சொன்னது.
''அப்பா இப்போ அடிக்கப்போறன் பேசாமல் படுத்து தூங்குங்கோ பாலஹாகன் போகவேணும்'' அதனை க்கேட்ட குழந்தை இனி அங்கே அனுப்பினால் நான் செத்துப்போவன், நறுக்கெனபதில் வந்தது. அதிர்ச்சியடைந்த செல்வரதி பிள்ளையை மேலும் பேசவிடாமல் இறுக்க அணைத்துக்கொண்டு மெல்ல தாலாட்டுகின்றாள்.

---

நிலோகஷா நித்திரையாகி பத்து நிமிடங்கள் ''செல்லா,,!''''என்ன,,?'' நித்திரையா?
'எப்படி நித்திரை கொள்ளமுடியும்..இவ்வளவும் நடந்த பிறகும்,, பார்த்தீங்களா,, எவ்வளவு பெரிய கதையெல்லாம் கதைக்கிறாளென்டு,, எனக்கென்றால்...?ஏன் இப்படியெல்லாம் ஒன்றுமே புரியமாட்டேங்குது,,,?'' அவளின் குரல் கரகரத்து இடையில் நிற்கின்றது.''எனக்கும் தான்'' அவளின் தலையில் கைவைத்தபடி,''இந்த வயசிலே, இப்படியொரு குறுகிய நினைவு,தப்புக்கணக் கு தான் கறுப்பென்று.தன்னோடு யாரும் சேருவதில்லை,தன்னை எல்லோரும் ஒதுக்கின்றார்கள் இதுக்கெல்லாம் காரணம்''நிறம்''.அவள் சொல்லிமுடிக்குமுன் ராஜசேகர் குறுக்கிட்டு,'' நிறம் என்டு சொல்லாதே,நாங்கள் எங்கட நாட்டைவிட்டு இந்த நாட்டுக்கு வந்ததுதான்''

---

''எனக்கு ஏதோ பயமாயிருக்கு,நமக்கிருக்கிறது ஒரே ஒரு பிள்ளைதான்,அதனோட எதிர் காலம் இந்த வழியா பாதிக்குமோ என்று.பேசாமல் இலங்கைக்கு திரும்பிப்போனலென்ன...? அவள் கண் கள் குளமாகியிருந்தது.விரக்தியோடு இருந்த ராஜசேகர் அவளது கதையைகேட்டு மீண்டும் போர்வை க்குள் கூடுகட்டுகின்றான்.''என்னங்க பதில் சொல்லாம,,,''அவள் கவலையுடன் கேட்க,
''பேசி முடிவெடுக்க இதுவா நேரம் பேசாமல் படுத்துதூங்கு''என சினந்து கொண்டு தலையோடு தலையணையை அணைக்கின்றான்.ஆனால் தூக்கம் வரவில்லை,இவனுக்கு மட்டுமல்ல செல்வரதிக் கும்தான்.இந்த இரவு சீக்கிரம் கரைந்து போகாதா என்ற ஏக்கம் இருவர் மனதிலும்.


படிப்பகம்

www.padippakam.com

பொழுதும் விடிகின்றது,நிலோகஷா பார்னஹாகனுக்கு போகமாட்டேன் என அடம்பிடிக்கின்றாள். ராஜசேகரும்,செல்வரதியும் நிலைமையைபுரிந்துகொண்டு இருவருமே அவளை பார்னஹாகனுக்கு கூட்டிச்செல்கின்றனர்.கார் வேகமாக விரைந்துகொண்டிருந்தது,பின் சீட்டில் நிலோகஷா பொம்மைகளோடு விளையாடிக்கொண்டிருந்தாள்.''நிலோகஷா'' என காரைஓட்டிக்கொண்டுருந்தபடியே குரல் கொடுக்கின்றான் ராஜசேகர்.''என்னப்பா என்ற படி முன்னுக்கு வருகின்றாள். அந்த லைட்டரை எடுத்து தா உங்களுக்கு எத்தனைதடவையப்பா சொல்லுறது.குடிக்கவேண்டாம்,குடிக்கவேண்டாம் என்று'' என செல்வரதி பேச அதை அப்படியே குழந்தை திருப்பிக்கூற மனைவியின் கண்டிப்பினால் கோபம் கொண்ட ராஜாசேகர் மழலைமொழி கேட்டு சிரித்தபடியே காரை ஓட்ட கார் பார்னஹாகனை அடைந்தது.

அங்கு பிள்ளைகளை பராமரிக்கும் பெண்ணிடம் தாங்கள் வந்த விடயத்தை தயக்கத்தோடு செல்வரதி கூற,அப்பெண்மணி கவலையுடன்''ஆமா எனக்கும்கூட கவலைதான்,நிலோகஷா வந்து மூன்று நாள் கூட ஆகவில்லை இப்படியொரு வேற்றுமை..பாகுபாட்டை மற்ற குழந்தைகள் நிலோகஷா மீது காட்டியது! அவள் நிறுத்திவிட்டு மெல்ல இருமுகின்றாள்.இவர்களது முகத்தில் சோகம் குடிகொண்டது, மேலும் அவள் என்ன சொல்லப்போகின்றாள் என்ற ஆவல்.'' தற்போதுக்கு நிலோகஷாவுக்கு இந்த பார்னஹாகன் தான் உலகம்.இந்த உலகமே அவளுக்கு கசக்கின்றது என்றால் அது நிலோகஷாவை பெரிதும் பாதிக்கும்,தனக்குள்ளே ஒரு இழிவான எண்ணத்தை உருவாக்கும். தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்'' அப்பெண்மணி ஒரு முறை எச்சிலை விழுங்கிவிட்டு தொடர்கின்றாள் செய்வதறியாது அப்பெண்ணை நோக்கிய படி,,,''நிலோகஷா தன் மனதில் இருக்கிறதை சொன்ன பிறகு நீங்கள் பிள்ளையின் எதிர் காலத்தை பாதிக்காதபடி ஒரு முடிவு எடுக்கவேண்டும் அது பெற்றோராகிய உங்களைப்பொறுத்தது.'' அவள் நிற்க.''

என்னங்க இது உயிருக்குப் பயந்து இந்நாட்டில் அகதியாக வாழ்கின்றோம்.சொந்த நாட்டிலே தான் வாழவழியில்லை,வந்த நாட்டிலாவது எமக்கு வாழ வழிகிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.இனி நாங்கள் என்ன முடிவு" எதையுமே தெளிவில்லாமல் திணறுகின்றான் ராஜசேகர்.கண்கலங்கிக் கொண்டிருந்த செல்வரதி '' அப்ப சரி நாங்கள் போயிட்டு வருகின்றோம்'' என இருக்கையைவிட்டு எழும்ப ''அப்போ நீங்கள் என்ன செய்ய உத்தேசம்" என அப்பெண்மணி பரிதாபமாக கேட்க ''குழந்தையின் மனசிலே கறைபடிய காரணமாக இருந்தது இந்த பார்னஹாகன் தான் ஸோ! இனிமே நாங்கள் நிலோகஷாவை இங்கு விடமாட்டோம்'' என திட்டவட்டமாக கூற,அதுசரி என்பது போல செல்வரதி தலையசைக்க ''அப்படியானால் வாழ்நாள் பூராவும் வீட்டுக்குள்ளே பூட்டிவைக்கப் போறீங்களா?


படிப்பகம்

www.padippakam.com

தயவு செய்து அப்படிச்சொல்லாதீங்கோ எப்போ ஒரு நாள் நம்ம நாட்டுப்பிரச்சனை தீரும் அப்ப
நிலோஷாவுக்கு இந்த உலகத்தைப்பற்றி புரியவைப்போம்.'' என தளர்ந்த குரலில் செல்வரதி.
'' நான் அதைச் சொல்லவரவில்லை. இன்றைக்கு, உங்கள மாதிரியானவங்கள எங்கள் சமுதாயம்
எந்தளவு இழிவாப் பேசுறாங்க, அப்படியான பேச்சுகளையெல்லாம் உங்கள் பிள்ளை. பிள்ளைகளுடை
ய பிள்ளைகள் எல்லோரும் கேட்க வேண்டுமா? இப்ப உங்கட பிள்ளையை கேட்க ஆரம்பித்துவிட்ட
து எனவே நிலோசாவுக்கு அதிலிருந்து விடுதலைகிடைத்து அவளை வளமான ஒரு செல்வமாக்குங்க
ள் அதுதான் என்னால சொல்லமுடியும்'' என்ற பெண்மணி முற்றுப்புள்ளியிடுகின்றாள். அவர்கள்
சோகத்தை தலைக்குமேலே வைத்துக்கொண்டு வெளியேறுகின்றனர்.

ஒரு பெரிய இரைச்சலுடன், புகையை வெளியே கக்கிவிட்டு கார் மூவருடன் பார்னஹாகளை
விட்டுகிளம்பியது. ராஜசேகரின் சிந்தனைச் சுழி நிலோசாவையே வட்டமிட்டது. சிந்தனைச் சுமையி
னால் ஒருவருடனும் அவன் கதைக்கவில்லை. ''என்னங்க அவள் சொன்னது மாதிரி நிறவேறுபாட்
டுப் பட்டங்களை நம்ம குழந்தையும் பெறவேண்டுமா? வேண்டாமுங்க, வேண்டாம் நாம இலங்கைகே
திரும்பிப் போயிடலாம். விசும்பலினூடே வார்த்தைகள் பின்னிக்கொண்டன. நிலோசாவுக்கு பார்னஹா
களில் இருந்து தப்பித்தோம் என்ற குதூகலிப்பு.



மௌனமாகவந்த ராஜசேகர் ''நானும் அதைத்தான்
நினைக்கின்றேன். ஏன் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு நாம முட்டுக்கட்டையாக இருக்கவேண்டும்?
பேசாமல் நம்ம நாட்டிக்கே திரும்பிப் போனால் என்ன? என்று சொல்ல ''அதுதானுங்க "" என்ற
படி காரின் ரேடியோவை திருவுகின்றாள் செல்வரதி. ஒரு இனம் புரியா மகிழ்ச்சி. ஒரு சிகரட்டை
எடுத்து உதட்டில் தொங்கவைத்துவிட்டு புகையை ஊதித்தள்ளுகின்றான். பின்பக்கமிருந்த நிலோசா
''குடிக்கவேண்டாம் என்று கேட்கமாட்டீங்க" என்ற படி வாயிலிருந்த சிகரட்டை பிடுங்குகிறாள்.
தடுமாறி கீழே விழுந்த சிகரட் அவனது தொடையை சுட, கட்டுபாட்டைமீறிய கார் மலைமீது மோதி
க்கொள்கின்றது.


படிப்பகம்

www.padippakam.com

மறுநாள் பதட்டத்தோடு டாக்டரின் அறைக்குள் நுழைகின்றான் ராஜசேகர்.ப்ளீஸ் சிட் டவுன் என்று டாக்டர் இருக்கையை காட்ட சடக்கென உட்கார்ந்து கொண்டான். யு டோண்ட் வொறி இந்த விபத்திலே உங்க மனைவி,பிள்ளை உயிர்தப்பியதே அதிசயம்.எங்களின் நீண்ட நேர பரிசோதனையில் அவர்களிருவருக்கும் தலையில் பலமான அடிவிழுந்திருப்பதால் இதனால் தலையில் உள்ள சில நரம்புத் தொகுதிகள் சேதமடைநுள்ளன, இவை மீளப் புதிப்பிக்க சுமார் ஒன்றரை வருடமாகும் எனவே அதுவரையும் விட்டில் உங்கள் பராமரிப்பில் ,,,'' என்று தயங்கியபடியே டாக்டர் அவன் முகத்தைப்பார்கின்றார்.அவன் முகம் வேதனையால் சுருங்குகிறது.துக்கம் நெஞ்சையடைக்க ராஜசேகர் இடிந்துபோனான்.''இப்போ நீங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு போகலாம்'' என டாக்டர் சொல்ல தலையசைத்தபடி இருவரையும் கைத்தாங்கலாக தூக்கிக்கொண்டு அறையைவிட்டு வெளியேறுகின்றான்.

எதிரே பார்ளஹாகளில் பணிபுரியும் அந்தப் பெண்மணி '' நான் எல்லாம் கேள்விப்பட்டுத்தான் ஓடிவருகின்றேன், இப்ப என்ன மாதிரி,,?.என அவள் வினாவுகின்றாள்.'' இப்ப இந்த நிற வேறுபாடு,,குலவேறுபாடு,,இவைகளையெல்லாம் உணர்ந்து உணர்ச்சிவசப்படும் நிலையில் என் பிள்ளையோ என் மனைவியோ இல்லை.எல்லாம் எம் இனம் என்றுதான் நினைக்கிறாங்க புரியாத தடுமாறங்கள்''.அவன் பேசுவதை இடைமறித்த செல்வரதி''நாங்கள் இலங்கைக்குப் போன மாதிரித்தான்'' என ஏசுகின்றாள்.''சரி நாங்கள் போய் வருகின்றோம்''என்று விட்டு மனதிலே சுமையிருந்தும் நம்பிக்கையோடு நடக்கின்றான்.

FLORØ

(யாவும் கற்பனையே!)   முற்றும்.

1990 இல் 38 மில்லியனாகவிருக்கும் தென்னாபிரிக்காவின் சனத்தொகை 2000 ம் ஆண்டளவில் 47.7 மில்லியனாகவும் 2005 ம் ஆண்டளாயவில் 53.5 மில்லியன்களாகவும் 2018 ம் ஆண்டளவில் 80 மில்லியனாகவும் உயர்ந்து விடுமென எதிர்பார்க்கப் படுவதால் நாட்டின் நீர் மற்றும் மூலவள உபயோகங்களை மட்டுப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

நன்றி: SOUTH AFRICAN BAROMETER


படிப்பகம்

www.padippakam.com

# முடிவடைந்த தேன் நிலவு!



லைபீரிய அகதிகள் முதல் தடவையாக கினியா (GUINEA) கோத்தே டி ஐவரி (COTE D'IVORIE) சியராலியோன் (SIERRA LEON) போன்ற நாடுகளுக்கு 1989 டிசம்பர் மாத இறுதியில் புலம் பெயர்ந்த போது அந்நாட்டின் கிராம,நகர் வாழ்மக்கள் தங்கள் வீடுகளைத் திறந்து அவர்களை வரவேற்றனர்.

புலம் பெயர்ந்த நாடு வறுமையில் வாடினாலும் அகதிகளாக வந்தவர்களை உபசரிப்பது வழக்கம். இங்கு லைபீரிய மக்களுக்கு காட்டப்பட்ட விருந்தோம்பல் முன்னெப்பொழுதும் இல்லாதது. எல்லையோரம் இருந்த தனிப்பட்ட மக்கள் தமது உணவை பகிர்ந்து கொண்டதுடன் விவசாயம் செய்ய தமது நிலங்களையும் கொடுத்தனர். பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் யாவும் கூட்டு வீடுகளாக(Group home) மாற்றமடைந்தது. உள்நாட்டு சுகாதாரசேவைகளும் அகதிகளுக்காக விரிவாக்கப்பட்டன. உலக அகதிகள் போல் அல்லாமல் லைபீரிய அகதிகள் புகலிடம் கொடுத்த மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர். இது புகழப்படவேண்டிய விடையம் என உள்ளூர் நிவாரணப் பணியாளர் கூறுகின்றார். அகதிகளை அவர்கள் சகோதரமாகவே கருதினர். இதை அவர்கள் பலவழிகளின் நிரூபித்தும் காட்டினர்.

முதலாவதாக அகதியிடத்தை தவிர்த்து மனித சுற்றாடலில் உணவும்,கழிப்பிட வசதிகளையும் செய்து கொடுத்தனர். சர்வதேச அமைப்புகளின் நடவடிக்கைகள் ஆரம்பத்தில் UNCHR மந்தமாகவும் பற்றாக்குறையாகவுமே இருந்தது. மேற்கு ஆபிரிக்காவின் இந்த அவல நிலைக்கு Gueiena, Ivorien, Leion போன்ற மக்களிடம் சான்றுகள் உண்டு. செழிப்பான ஐவரி நாட்டுக்கு அகதிகள் வந்ததும் தாமே எல்லாவற்றையும் செய்யத்தொடங்கி விட்டனர் இதனால் UNCHR போன்ற நிறுவனங்களை இவர்கள் நாடவில்லை. அகதிகள் வந்து 2 வருடங்கள் ஆகின்றன இப்போது Gueina, Leion, Ivori போன்ற நாடுகளின் சனத்தொகை கின்யாவில்566,000 பேர்(397.000லைபிரியர்) இப்படியாக அதிகரித்துவரும் சனத்தொகை அகதிகளின் தேன் நிலவாக இருந்த வாழ்க்கைக்கு முடிவுவந்துவிட்டதாக தெரிகின்றது.

தொகுப்பு உமா மகேஸ்வரன்.

ஆதாரம் REFUGEES



படிப்பகம்

www.padippakam.com



# தூது! தூது!! தூது!!!

நீலக்கடல் அலையோரத
அதன் மேலே உன் முகமே!
சிறைவைத்த உன் கண்ணிரண்டை
விலை பேச வருவாயோ?
நீ திசையறிந்த பாதையெல்லாம்
நிலைகொண்டு நின்றாயோ?
என் கனவென்னும் வாழ்க்கை முடிவதற்குள்
நீ முழுநிலவாய் இருப்பாயோ?
உடல் மெலிந்து உணர்வு இழந்தாலும்
உன் இதயம் என்னிடத்தில் - அதனால்
உனக்கு மட்டும் அனுப்பிவைப்பேன்
காற்றினிலே கவிதையொன்றை!

XX சே.வீரசேகரன் புனூரெ XXXXXXXX

படிப்பகம்

www.padippakam.com

## விமர்சனம்! விமர்சனம்!! விமர்சனம்!!

அன்பின் அலைகள் ஆசிரியருக்கு!
அலைகள் இதழை பார்க்கும்,படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.முதல் இதழைப் பற்றி குறை கூற வேண்டிய சூழ்நிலைக்கு மனம்வருந்தவேண்டாம். குறைகளை சுட்டிக்காட்டுவது வாசகர் கடமை. அதைநிவர்த்திசெய்வது ஆசிரியர் கடமை.'முதல் ராத்திரி' என்ற சிறுகதை பிரபல்யமான இந்திய வாரப்பத்திரிகையில் வெளிவந்தது.அதை எடுத்தாண்டவர் பெயரை மாற்றம் செய்து தனதென்று சொந்தம் கொண்டாடுகின்றார்.அவருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்!.இதனை எழுத்தாளர் மறுத்தால் தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும். அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பார்க்கும்.

க.கள KATTEM

EEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEE

'முதல் ராத்திரி' சிறுகதை ஆனந்த விகடனில் வெளிவந்ததென பேர்களில் இருந்து விக்ரர் என்பவரும் எழுதியிருந்தார்.அக்கடிதம் தவறுதலாக தொலைந்துவிட்டதால் பிரசுரிக்க முடியாமைக்கு மனம்வருந்துகின்றோம்.

ஆ/ர்

EEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEE

பல கடிதங்கள் காலதாமதமாக கிடைத்தினால் பிரசுரமாகவில்லை ஆயினும் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ/ர்

EEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEEE


**ஆக்கங்களின் மூலக்கருவில் வழு ஏற்படாது அவற்றை சீர்திருத்தும் உரிமை ஆசிரியருக்கு உண்டு.**

படிப்பகம்

www.padippakam.com


# அலைகள்

1992 மே




படிப்பகம்

www.padippakam.com




Flo… e Kunst- og Kulturforening
…REGT. 7, 6900 FLORØ

வெளியிடுவோர்: புளோரா தமிழ் கலை கலாச்சார சங்கம்.

படிப்பகம்